தினபூமி
thinaboomi.com
பூமி: 21 சுற்று: 346 கார்த்திகை 23
RNI Regn. No. 61494/94
வேலூர், செவ்வாய், டிசம்பர் 09, 2025
சென்னை · மதுரை · திருச்சி · கோவை · நெல்லை · சேலம் · வேலூர் · புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



## மீண்டும் போர் பதற்றம்: கம்போடியா மீது தாய்லாந்து திடீர் தாக்குதல்: ஒருவர் பலி

....2-ம் பக்கம்

## தமிழ்நாட்டிலும் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமைக்கும்: மத்திய அமைச்சர் நம்பிக்கை

...3-ம் பக்கம்

## இன்று முதல் டி-20 போட்டி: இந்தியா - தென் ஆப்பிரிக்கா அணிகள் கட்டாக்கில் மோதல்

....6-ம் பக்கம்



### மக்கள் துணையுடன் தமிழ்நாட்டில் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையும்:

# சட்டசபை தேர்தலில் தி.மு.க.வின் வாக்குகள் 2.50 கோடியை தாண்டும்

### மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் மு.க.ஸ்டாலின் நம்பிக்கை

சென்னை, டிச. 09-

**தமிழ்நாட்டில் மக்கள் துணையுடன் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையும் என்றும் வரும் சட்டசபை தேர்தலில் தி.மு.க.வின் வாக்குகள் 2.50 கோடியை தாண்டும் என்றும் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார். மேலும் தி.மு.க.வின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் பணியாற்ற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.**

**வாக்குச்சாவடி வாரியாக**

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறும் என தெரிகிறது. இந்த தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெற இலக்கு நிர்ணயித்து தி.மு.க. தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் வியூகம் வகுத்து செயல்பட்டு வருகிறார். இதற்காக வாக்குச்சாவடி வாரியாக பாக முகவர்கள் தி.மு.க.வில் நியமிக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் அனைவரையும் அந்தந்த நகர ஒன்றிய பேரூர் அளவில் ஒருங்கிணைந்து ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற தொகுதி வாரியாகவும் பாக முகவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**முதல்வர் ஆலோசனை**

இதைத் தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலினும் மண்டல அளவில் ஆலோசனை கூட்டங்களை நடத்தி முடித்துள்ளனர். இதன் பிறகு என் வாக்குச் சாவடி-வெற்றி வாக்குச்சாவடி பயிற்சி கூட்டத்தை மாமல்ல புரத்தில் கடந்த அக்டோபர் மாதம் 28-ந் தேதி நடத்தினார். ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வெற்றியை உறுதி செய்யும் வகையில் பணியாற்ற வேண்டும் என்று கட்டளையிட்டு இருந்தார். இப்போது என் வாக்குச் சாவடி-வெற்றி வாக்குச் சாவடி செயல்பாடு எப்படி உள்ளது என்பது பற்றி ஆலோசிக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காணொலி வாயிலாக மாவட்டக் கழக செயலாளர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

**வேரோடு வீழ்த்துவோம்**

அவரது அறிவுரைகளை கேட்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநகர ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள், சட்டமன்ற பாராளுமன்ற, உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோரை ஒரே இடத்தில் அமர வைத்து முதல்வரின் பேச்சை கேட்பதற்காக மாவட்டச் செயலாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அதன்படி நேற்று காலை 10 மணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் உரையாற்றினார். அவர் பேசும் போது, தமிழ்நாட்டை கபளீகரம் செய்ய திட்டமிடும் கூட்டத்தை வேரோடு வீழ்த்துவோம். மத்திய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கு செய்து கொண்டிருக்கும் துரோகங்களை நிதி ஒதுக்கீடுகளில் செய்து கொண்டிருக்கும் வஞ்சகங்களை எடுத்துச் சொல்லுங்கள். நீங்கள் அனைவரும் ஒருங்கிணைந்து அவரவர் வாக்குச்சாவடியில் வெற்றி பெறுவது இலக்காக இருக்க வேண்டும். ஒவ்வொரு பூத்துக்கும் ஒரு டார்கெட் உருவாக்கி செயல்படுங்கள்.

**தி.மு.க ஆட்சி அமைக்க...**

தேர்தலில் பணியாற்றும் ஒவ்வொருவரும் தி.மு.க ஆட்சி அமைக்க வேண்டும் என்ற இலக்கை உள்ளத்தில் தாங்கி உழைக்க வேண்டும். நீங்கள் உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனக்கு நன்றாக தெரியும். ஆனாலும் இன்னும் உங்கள் பணியை வேகப்படுத்துங்கள். அனைவரும் ஒற்றுமையாக பணியாற்றுங்கள். ஒற்றுமை இல்லாமல் எந்த இலக்கையும் அடைய முடியாது. நம்முடைய வெற்றியை யாரும் தடுக்க முடியாது. என்னுடைய வாக்குச்சாவடியில் தி.மு.க. கூட்டணியை வெற்றி பெறச்செய்ய வேண்டுமென்று ஒவ்வொரு கழக உடன் பிறப்புகளும் உறுதியேற்று களப்பணியாற்றினால், அனைத்து வாக்குச்சாவடிகளிலும் முன்னிலை பெற்று, 2026-ல் 7-வது முறையாக தி.மு.கழகம் ஆட்சி அமைவது உறுதியாகி விடும்.

**மனமார்ந்த பாராட்டுகள்...**

தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையை பாதுகாக்க உயரிய நோக்குடன், பசி, உறக்கம், குடும்பம் ஆகியவற்றைத் துறந்து எஸ்.ஐ.ஆர். பணிகளில் ஈடுபட்ட அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுகள்...வாழ்த்துகள். நாம் இவ்வளவு கடினப்பட்டு இருந்தாலும் பாதி கிணறு தான் கடந்துள்ளோம். வெரிபிகேஷன் பணிகள் நிறைவடைந்து, நமது மக்களின் பெயர்கள் விடுபடாமல் வாக்காளர் பட்டியல் வந்தால் தான் முழு கிணற்றையும் கடந்ததாக கருத முடியும்.

**தீவிரமாக பணியாற்ற...**

எஸ்.ஐ.ஆர். பணிகள் வாக்குரிமையை பாதுகாக்கும் அடிப்படைப் பணியாக இருந்தால், "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்பது நமது வெற்றியை உறுதிப்படுத்தும் தேர்தல் பணியாகும். எனவே, நாம் அனைவரும் களத்தில் மிகுந்த தீவிரத்துடன் பணியாற்ற வேண்டும். உங்கள் ஆற்றலுக்கும் உழைப்புக்கும் முன் எவராலும் நிற்க முடியாது. எத்தனை எதிரிகள் வந்தாலும், எத்தனை அணிகள் செயல்பட்டாலும், தமிழ்நாட்டை மீண்டும் ஆளப்போவது உதயசூரியன்தான். உங்களை உற்சாகப்படுத்தும் நோக்கில் இதை கூறவில்லை. இது தான் உண்மை.

**எடுத்துச் சொல்ல...**

நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களின் மூலம், தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 86 லட்சம் மக்கள் நேரடியாக பயனடைந்து வருகின்றனர். இதில் பயனாளிகளுடன் சேர்த்து, கழகத்தினரையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். முந்தைய ஆட்சிக்காலங்களில் மழை பெய்தாலே உதவிக்காக காத்திருந்த நிலையும், நிவாரணப்

(கடைசி பக்கம் பார்க்க)



தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று முகாம் அலுவலகத்திலிருந்து, 'என் வாக்குச் சாவடி - வெற்றி வாக்குச்சாவடி' என்ற தலைப்பில் கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் காணொலிக்காட்சி வாயிலாக நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், பொருளாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, முதன்மைச்செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு, இளைஞர் அணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின், துணை பொதுச்செயலாளர்கள், மாவட்டச்செயலாளர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

### மேலும் 23 சட்டமன்ற தொகுதிகளில்

# முதல்வர் சிறு விளையாட்டு அரங்கம்: மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

சென்னை, டிச. 09-

**69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 23 சட்டமன்ற தொகுதிகளில் முதல்வர் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்க மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.**

2021-2022ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், விளையாட்டு வசதிகள் இல்லாத அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் தலா 3 கோடி ரூபாய் செலவில் சிறு விளையாட்டு அரங்கங்கள் நிறுவப்படும் எனவும், சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து ஒரு பகுதியை இந்நோக்கத்திற்காக பயன்படுத்துமாறு ஊக்குவிக்கப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் பல்வேறு விளையாட்டு வசதிகளுடன் ஒரு சிறு விளையாட்டரங்கம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 2022-2023ம் ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையில், தமிழ்நாட்டில் 10 இடங்களில் தலா 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறு விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், முதல் கட்டமாக கொளத்தூர், சேப்பாக்கம், ஸ்ரீவைகுண்டம், காரைக்குடி, சோழவந்தான், வாணிம்பாடி, காங்கேயம், ஆலங்குடி ஆகிய 8 சட்டமன்றத் தொகுதிகளில் ரூ.2.50 கோடி அரசு நிதியும், 50 லட்சம் ரூபாய் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், என மொத்தம் தலா 3 கோடி ரூபாய் செலவில் முதலைமைச்சர் சிறு விளையாட்டரங்கம் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

மேலும், பத்மநாபுரம் சட்டமன்றத் தொகுதியில் முதலமைச்சர் சிறு விளையட்டரங்கம் அமைக்கும் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்

(கடைசி பக்கம் பார்க்க)

# பார்லி. மக்களவையில் இன்று எஸ்.ஐ.ஆர். குறித்து விவாதம்

### ராகுல் காந்தி தொடக்கி வைக்கிறார்

புதுடெல்லி, டிச. 09-

**பாராளுமன்ற மக்களவையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.) தொடர்பான விவாதத்தை செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தொடக்கி வைக்கவுள்ளார்.**

பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் குளிர்காலக் கூட்டத்தொடர் நடைபெற்று வருகின்றன. இந்த கூட்டத் தொடரின் முதல் நாளில் இருந்தே, எஸ்.ஐ.ஆர். குறித்து விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டதால், அவை நடவடிக்கைகள் முடங்கின. இதனைத் தொடர்ந்து, டிச. 9 ஆம் தேதி மக்களவையில் எஸ்.ஐ.ஆர். குறித்து விவாதிக்கப்படும் என்று மத்திய அரசு தரப்பில் தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், மக்களவையில் இன்று நடைபெறும் எஸ்.ஐ.ஆர். தொடர்பான விவாதத்தை எதிர்க்கட்சித் தரப்பில் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தொடக்கி வைக்கவுள்ளார். இந்த விவாதம் 10 மணிநேரம் நடைபெறும் என்றும், புதன்கிழமை காலை மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் மேக்வால் பதிலத்து பேசவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் சார்பில் கே.சி. வேணுகோபால், மணீஷ் திவாரி, வர்ஷா கெய்க்வாட், முகமது ஜவைத், உஜ்வல் ராமன் சிங், இஷா கான் சௌத்ரி, மல்லு ரவி, இம்ரான் மசூத், கோவல் படவி மற்றும் ஜோதிமணி உள்ளிட்டோர் விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விவாதத்தின் போது, எஸ்.ஐ.ஆர். பணியில் ஈடுபட்ட ஊழியர்கள் பலி, வாக்குத் திருட்டு உள்ளிட்ட விவகாரங்களை ராகுல் காந்தி எழுப்புவார் என்பதால் மிகுந்த எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

கடந்த ஓராண்டாக, மகாராஷ்டிரம், ஹரியாணா மற்றும் கர்நாடக மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் வாக்குத் திருட்டு நடைபெற்றதாக தரவுகளை வெளியிட்டு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டை முன்வைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

### நடிகை பாலியல் வழக்கு:

# பிரபல மலையாள நடிகர் திலீப் விடுவிப்பு

எர்ணாகுளம், டிச. 09-

**நடிகை பாலியல் வழக்கில் நடிகர் திலீப் மீதான குற்றச்சாட்டிற்கு போதிய ஆதாரம் இல்லை என்று எர்ணாகுளம் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.**



கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம் அங்கமாலி அருகே அத்தாணி பகுதியில், கடந்த 17.2.2017 அன்று பிரபல நடிகை ஒருவர் படப்பிடிப்பு முடிந்து கேரவனில் சென்று கொண்டிருந்தார். அப்போது பின்னால் காரில் வந்த கும்பல் கேரவனை தடுத்து நிறுத்தி, அதன் உள்ளே அத்துமீறி நுழைந்தது. அங்கு இருந்த நடிகைக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்தது.

இதுகுறித்து நடிகை அளித்த புகாரின் பேரில் மாநில குற்றப்புலன் விசாரணை பிரிவு போலீசார் விசாரித்து வந்தனர். விசாரணையில் பெரும்பாவூர் அருகே கூவப்படியை சேர்ந்த பல்சர் சுனில் என்கிற சுனில் குமார் என்பவர் உள்பட சிலர் அந்த செயலில் ஈடுபட்டதும், அவர் நடிகையின் கார் டிரைவராக இருந்ததும் தெரியவந்தது. அவரை போலீசார் கைது செய்தனர்.

இந்த வழக்கில் மலையாள பிரபல நடிகர் திலீப்புக்கும், நடிகைக்கும் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக, திலீப் சதி திட்டம் தீட்டி நடிகைக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்ததாக கூறப்பட்டது. அதை தொடர்ந்து நடிகர் திலீப், பல்சர் சுனில் உள்பட 8 பேரை போலீசார் கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை எர்ணாகுளம் முதன்மை செசன்ஸ் கோர்ட்டில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் எனக்கு எந்த தொடர்பும் இல்லை. திட்டமிட்டு என்னை சிக்க வைத்து உள்ளதாக நடிகர் திலீப் தெரிவித்துள்ளார். இந்த வழக்கில் 251 சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டு வந்தது. இந்த வழக்கில் நேற்று தீர்ப்பளித்த எர்ணாகுளம் நீதிமன்றம் நடிகர் திலீப் மீதான குற்றச்சாட்டிற்கு போதிய ஆதாரம் இல்லை என்று கூறி விடுதலை செய்துள்ளது. மேலும் அவரது நண்பர் சரத் என்பவரை பாலியல் துன்புறுத்தல் வழக்கில் விடுவித்துள்ளது. மார்ட்டின் ஆண்டனி, மணிகண்டன், சுனில் உள்ளிட்ட 6 பேர் குற்றவாளிகள் என்றும் எர்ணாகுளம் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கேரளாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நடிகை பாலியல் வன்கொடுமை வழக்கில் 8 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. குற்றவாளிகளுக்கான தண்டனை குறித்து வருகிற டிசம்பர் 12ம் தேதி அறிவிக்கப்படும் என்று கோர்ட் தெரிவித்துள்ளது.

### வந்தே மாதரம் பாடலின் பெருமையை

# பறைசாற்றும் வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது: பிரதமர் மோடி

புதுடெல்லி, டிச. 09-

**வருங்கால சந்ததிகளுக்கு வந்தே மாதரம் வழிகாட்டியாக இருக்கும். வந்தே மாதரத்தின் பெருமையை பறைசாற்றும் வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது என்று தேசியப் பாடலான வந்தே மாதரத்தின் 150-வது ஆண்டு விழா குறித்த விவாதத்தை மக்களவையல் பிரதமர் மோடி தொடங்கி வைத்து பெருமிதம் தெரிவித்துள்ளார்.**



அப்போது பிரதமர் மோடி பேசியதாவது:

இந்தியா ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டு இருந்த காலத்தில் நாட்டு மக்களிடையே தேசப்பற்றை தூண்டும் விதத்தில் வங்காளத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் பங்கிம் சந்திர சட்டர்ஜி, வந்தே மாதரம் பாடலை இயற்றினார். 1870-களில் இயற்றப்பட்ட இந்த பாடலுக்கு ஜாது நாத் பட்டாச்சார்யா இசை அமைத்தார். இது 1905-ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் நாடு சுதந்திரம் அடைந்து குடியரசு நாடாக ஆனதற்கு 2 நாட்களுக்கு முன்பு அதாவது 1950-ம் ஆண்டு ஜனவரி 24-ந் தேதி தேசிய பாடலாக இது அங்கீகரிக்கப்பட்டது.

இந்த பாடலின் 150-வது ஆண்டு விழா கடந்த மாதம் 7-ந் தேதி கொண்டாடப்பட்டது. டெல்லி இந்திராகாந்தி விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் பிரதமர் மோடி, வந்தே மாதரம் பற்றிய சிறப்பு நாணயம் மற்றும் தபால் தலையை வெளியிட்டு பேசினார். அவரது உரையில் காங்கிரஸ் மீது குற்றச்சாட்டு இருந்தது.

இந்தநிலையில் பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் வந்தே மாதரம் பாடலின் 150-வது ஆண்டு விழா குறித்த விவாதம் நேற்று நடைபெற்றது. "தேசியப் பாடலான வந்தே மாதரத்தின் 150-வது ஆண்டு விழா குறித்த விவாதம்" என்ற தலைப்பில் பட்டியலிடப்பட்டு இருக்கும் இந்த விவாதத்தை பிரதமர் மோடி நேற்று மக்களவையில் தொடங்கி வைத்தார்.

அப்போது பிரதமர் மோடி பேசியதாவது: வருங்கால சந்ததிகளுக்கு வந்தே மாதரம் வழிகாட்டியாக இருக்கும். வந்தே மாதரத்தின் பெருமையை பறைசாற்றும் வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது. வந்தே மாதரம் இயற்றப்பட்ட போது நாடு அடிமைச் சங்கிலியில் சிக்கியிருந்தது. நாடு அடிமைப்பட்டு இருந்தது நமது வரலாற்றில் கருப்பு அத்தியாயம். வந்தே மாதரம் ஊக்குவித்த சுதந்திர போராட்டத்தால் நாம் இன்றும் சுதந்திரமாக அமர்ந்து இருக்கிறோம். 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா உருவாக்க வந்தே மாதரம் நம்மை ஊக்குவிக்கும். இந்த விவகாரத்தில் எதிர்க்கட்சி, ஆளும் கட்சி கூட்டணி என்றெல்லாம் இல்லை. தாய் நாட்டை மீட்பதற்கான கருவியாக வந்தே மாதரம் திகழ்ந்தது"

இவ்வாறு அவர் பேசினார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -609.68 | -225.90 |
| பாயின்ட் 85,102.69 | பாயின்ட் 25,960.55 |

| தங்கம் | வெள்ளி | டாலர் | பெட்ரோல் |
|---|---|---|---|
| 1 சவரன் ₹96,320 | 1 கிலோ ₹198,000 | ₹90.05 | ₹100.75 |
| 1 கிராம் ₹12,040 | 1 கிராம் ₹198.00 | | டீசல் ₹92.34 |

மீண்டும் போர் பதற்றம்:

# கம்போடியா மீது தாய்லாந்து திடீர் தாக்குதல்: ஒருவர் பலி

**பாங்காக், டிச. 09-**

கம்போடியா மீது தாய்லாந்து தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து அங்கு மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டது.



தென்கிழக்கு ஆசிய பகுதியில் அமைந்த தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகள் இடையே நீண்டகால மோதல் போக்கு நிலவி வருகிறது. இரு நா டுகளின் எல்லையில் தா முயென் தாம் என்ற கோவில் அமைந்துள்ளது. இந்த கோவில் அமைந்துள்ள பகுதிக்கு இரு நாடுகளும் உரிமை கோருகின்றன. இதுதொடர்பாக கடந்த மே மாதம் இரு நாட்டு ராணுவ வீரர்களும் மோதி கொண்டனர். இதில் கம்போடியா ராணுவ வீரர் உயிரிழந்தார்.

இதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையே போர் வெடித்தது. கடந்த ஜூலை மாதம் 24ம் தேதி முதல் 28ம் தேதி வரை நடந்த போரில் 48 பேர் உயிரிழந்தனர். இரு நாட்டு எல்லையில் இருந்தும் சுமார் 3 லட்சம் மக்கள் வெளி யேற் றப் பட் ட னர். இந்த போரின்போது எல்லையில் கண்ணிவெடிகள் நிலத்தில் பதித்து வைக்கப்பட்டன. 5 நாட்கள் நடந்த போர் பேச்சுவார்த்தைக்குப் பின் முடிவுக்கு வந்தது. ஆனாலும், இரு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது.

இந்நிலையில், கம்போடியா மீது தாய்லாந்து நேற்று வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது. எல்லையில் கம்போடியா முதலில் அத்துமீறி துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தியதாகவும் இதற்கு பதிலடியாகவே வான்வழி தாக்குதல் நடத்தியதாகவும் தாய்லாந்து தெரிவித்துள்ளது. கம்போடியா நடத்திய தாக்குதலில் பாதுகாப்புப்படை வீரர் ஒருவர் உயிரிழந்ததாகவும், இதற்கு பதிலடி கொடுக்கப்பட்டதாகவும் தாய்லாந்து தெரிவித்துள்ளது. அதேவேளை, தாய்லாந்து நடத்திய தாக்குதலில் கம்போடியாவில் ஏற்பட்ட உயிரிழப்பு உள்ளிட்ட பாதிப்புகள் குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை.

இந்த மோதலால் தாய்லாந்து, கம்போடியா இடையே மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# மகாராஷ்டிராவில் சோகம்: கார் கவிழ்ந்து 6 பேர் பலி

**மும்பை, டிச. 09-**

மகாராஷ்டிராவில் பள்ளத்தாக்கில் கார் கவிழ்ந்து விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டம் நிப்ஹட் பகுதியை சேர்ந்த 6 பேர் ஒரு காரில் நேற்று முன்தினம் மாலை கல்வான் பகுதிக்கு சென்றுகொண்டிருந்தனர். கல்வான் அருகே மலைப்பாங்கான ஹர்க் ஹண்ட் பகுதியில் சென்றபோது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த கார் 600 அடி பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் காரில் பயணித்த 6 பேரும் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

விபத்து குறித்து தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், உயிரிழந்த 6 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அருணாச்சல பிரதேசத்தில் நிலநடுக்கம்

**இடாநகர், டிச. 09-**

அருணாச்சல பிரதேசத்தில் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது.

அருணாச்சல பிரதேசத்தின் ஷி யோமி பகுதியில் நேற்று காலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிகாலை 2:38 மணியளவில் ரிக்டர் அளவில் 3.3 ஆக நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 28.53 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 94.48 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை.

# தங்கம் விலையில் மாற்றமில்லை

**சென்னை, டிச. 09-**

வார தொடக்க நாளான நேற்று தங்கம் விலையில் மாற்றமின்றி விற்பனையானது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று மாற்றமின்றி ஒரு சவரன் ரூ.96,320-க்கும், ஒரு கிராம் ரூ.12,040-க்கும் விற்பனையானது.

தங்கம் விலை கடந்த அக்டோபர் மாதம் 17-ம் தேதி ஒரு சவரன் ரூ.97,600 என்ற உச்சத்துக்கு சென்று, அதே மாதம் 28-ம் தேதி ஒரு சவரன் ரூ.88,600 என்ற நிலைக்கு வந்தது. அதன் பிறகு தங்கம் விலை தொடர்ந்து ஏற்ற, இறக்கத்துடனேயே போக்கு காட்டி வருகிறது. முதலீட்டாளர்களின் கவனம் ஒரு நாள் தங்கத்தின் பக்கமும், மறுநாளில் பங்கு சந்தைகள் பக்கமும் மாறி மாறி செல்வதால் இந்த நிலை நீடிக்கிறது.

கடந்த 3 நாட்களுக்கு முன் தங்கம் விலை கிராமுக்கு ரூ.40-ம், சவரனுக்கு ரூ.320-ம் அதிகரித்து ஒரு கிராம் தங்கம் ரூ.12,040-க்கும், சவரன் ரூ.96,320-க்கும் விற்பனையானது. இந்த நிலையில் வார தொடக்க நாளான நேற்று தங்கம் விலையில் மாற்றமின்றி விற்பனையானது.

அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று மாற்றமின்றி ஒரு சவரன் ரூ.96,320-க்கும், ஒரு கிராம் ரூ.12,040-க்கும் விற்பனையானது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1-ம், கிலோவுக்கு ஆயிரம் ரூபாயும் குறைந்து, ஒரு கிராம் ரூ.198-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 98 ஆயிரத்துக்கும் விற்பனையானது.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், மறுசீரமைக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவர் நீதியரசர் வீ.பாரதிதாசன், உறுப்பினர்கள் டி.எஸ்.இராஜசேகர், (ஓய்வு), ஏ.பி.மகாபாரதி, (ஓய்வு), எஸ்.நடராஜன், கே.மேக்ராஜ், (ஓய்வு), டாக்டர் பெரு.மதியழகன் (தருமபுரி), டாக்டர் எஸ்.பி.சரவணன் (மதுரை), ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர்/பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் டாக்டர் சீ.சுரேஷ்குமார், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வி.கலையரசி ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

விஜய் பொதுக்கூட்டத்திற்கு அனுமதி மறுப்பு:

# ஈரோட்டில் மாற்று இடம் தேர்வு செய்வதில் செங்கோட்டையன் தீவிரம்

**ஈரோடு, டிச. 09-**

ஈரோட்டில் வருகிற 16-ம் தேதி விஜய் பொதுக்கூட்டத்திற்கு போலீஸ் அனுமதி மறுத்த நிலையில் மாற்று இடம் தேர்வு செய்வதில் செங்கோட்டையன் தீவிரம்காட்டி வருகிறார்.

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் 2026-ம் சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற பல்வேறு யூகங்களை வகுத்து வருகிறார். அதன்படி புதுச்சேரியில் இன்று (செவ்வாய்க்கிழமை) விஜய்யின் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. விஜய் தமிழகம் முழுவதும் தேர்தல் பிரசாரத்தை தீவிரப்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை கட்சியின் உயர்மட்ட மாநில நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் நிர்வாகிகளுடன் ஈரோடு சம்பத் நகரில் உள்ள கலெக்டர் முகாம் அலுவலகத்துக்கு சென்றார். அங்கு கலெக்டர் கந்தசாமியை சந்தித்து வருகிற 16-ந் தேதி த.வெ.க. தலைவர் விஜய்யின் பிரசார பொதுக்கூட்டத்துக்கு அனுமதி கேட்டு மனு அளித்தார். பின்னர் ஈரோடு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்திலும் பொதுக்கூட்டத்துக்கு அனுமதி கேட்டு மனு வழங்கினார்.

அதன்பின்னர் செங்கோட்டையன் நிருபர்களிடம் கூறியதாவது:- தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் ஈரோடு மாவட்டத்தில் வருகிற 16-ந் தேதி சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறார். ஈரோடு-பெருந்துறை ரோட்டில் உள்ள பவளத்தாம்பாளையம் அருகே தனியார் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த பொதுக்கூட்டத்துக்கு அனுமதி கேட்டு ஈரோடு கலெக்டர் மற்றும் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் மனு வழங்கப்பட்டுள்ளது.அனுமதி கிடைத்தவுடன் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு பொதுக்கூட்டம் நடத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்'' இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கிடையில் விஜய் பொதுக்கூட்டத்துக்கு அனுமதி கேட்ட பவளத்தாம்பாளையத்தில் உள்ள 7 ஏக்கர் காலி இடத்தை போலீஸ் சூப்பிரண்டு சுஜாதா தலைமையிலான போலீசார் ஆய்வு செய்தனர். இடபற்றாக்குறை காரணமாக அங்கு அனுமதி மறுத்த போலீசார் மாற்று இடத்தை தேர்வு செய்யும்படி அறிவுறுத்தினர். அதன் பேரில் பெருந்துறை அருகே மாற்று இடத்தை தேர்வு செய்ய செங்கோட்டையன், த.வெ.க. நிர்வாகிகளுடன் தீவிர ஆலோசனை நடத்தினார். இதைத்தொடர்ந்து ஈரோடுமாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் தேர்வு செய்த மாற்று இடத்தில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கேட்டு மீண்டும் மனு கொடுக்கப்பட்டது.

ரஷ்ய அதிபர் புதினை தொடர்ந்து

# உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி விரைவில் இந்தியா வருகை

**புதுடெல்லி, டிச. 09-**

ஜனவரி மாதம் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி இந்தியா வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்ய அதிபர் புதின் சமீபத்தில் 2 நாட்கள் சுற்றுப்பயணமாக இந்தியா வந்திருந்தார். டெல்லியில் நடைபெற்ற 23-வது இந்தியா-ரஷ்யா வருடாந்திர உச்சி மாநாட்டிலும் பிரதமர் மோடியும், ரஷ்ய அதிபர் புதினும் கலந்து கொண்டனர். மேலும் இந்தியா-ரஷ்யா இடையே பல்வேறு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

சமீப காலமாக இந்தியா-அமெரிக்கா உறவுகளில் சிக்கல் ஏற்பட்டுள்ள சூழலில், ரஷ்ய அதிபரின் இந்திய வருகை சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்தது. புதினின் வருகையின்போது, உக்ரைன் விவகாரத்தில் இந்தியா நடுநிலையாக இல்லை என்றும், அமைதியின் பக்கம் இருக்கிறது என்றும் பிரதமர் மோடி தெரிவித்தார். தொடர்ந்து புதின் பேசுகையில், அமைதியான தீர்வை நோக்கி ரஷ்யா செயல்பட்டு வருகிறது என்று கூறினார். இந்த சூழலில், ரஷ்ய அதிபர் புதினின் இந்தியா வந்து சென்ற நிலையில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி விரைவில் இந்தியாவிற்கு வருகை தர உள்ளார். இதன்படி வரும் ஜனவரி மாதம் ஜெலன்ஸ்கி டெல்லிக்கு வர உள்ளதாகவும், அவரது பயண தேதி இந்திய-உக்ரைன் வெளியுறவுத்துறை அதிகாரிகளின் பேச்சுவார்த்தைக்குப் பின் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் போர் நிறுத்த திட்டம்:

# ரஷ்யா ஏற்றுக்கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தகவல்

**வாஷிங்டன், டிச. 09-**

உக்ரைன் போர் நிறுத்த திட்டத்தை ரஷ்யா ஏற்றுக் கொண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

உக்ரைன் , ரஷ்யா இடையே நேற்று 1 ஆயிரத்து 383வது நாளாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதே வேளை, போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் ட்ரம்ப் முயற்சித்து வருகிறார். போர் நிறுத்த திட்டம் தொடர்பாக 28 நிபந்தனைகள் கொண்ட உடன்படிக்கையை ட்ரம்ப் முன்மொழிந்துள்ளார். இந்த நிபந்தனைகளில் சிலவற்றை ஏற்க உக்ரைன் மறுத்து வருகிறது. இதனால் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவரிடம் உக்ரைன் - ரஷ்யா போர் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதகு பதில் அளித்த டொனால்டு ட்ரம்ப், போர் நிறுத்தம் தொடர்பாக ரஷ்ய அதிபர் புதின், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியிடம் பேசி வருகிறோம். போர் நிறுத்தம், அமைதி திட்டத்தை ரஷ்யா ஏற்றுக்கொண்டுள்ளது. அது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால், இந்த திட்டத்தை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி புரிந்துகொள்ளவில்லை. அது எனக்கு ஏமாற்றம் தான்' என்றார்.

# காஷ்மீருக்குள் நுழைந்த சீனர் கைது

**ஜம்மு, டிச. 09-**


சட்டவிரோதமாக ஜம்மு-காஷ்மீருக்குள் நுழைந்த சீன நாட்டைச் சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சீன நாட்டைச் சேர்ந்த ஹூ காங்டாய் (29). இவர் கடந்த நவம்பர் 19 ஆம் தேதி சுற்றுலா விசாவில் தில்லிக்கு வந்தார். வாரணாசி, ஆக்ரா, புது தில்லி, ஜெய்ப்பூர், சாரநாத், கயா மற்றும் குஷி நகர் ஆகிய இடங்களில் உள்ள புத்த மத தலங்களைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டிருந்து. இருப்பினும் அவர் நவம்பர் 20ல் லேவுக்கு விமானத்தில் சென்றார். ஆனால் லே விமான நிலையத்தில் அமைந்துள்ள வெளிநாட்டினர் பிராந்திய பதிவு அலுவலக கவுண்டரில் அவர் பதிவு செய்யவில்லை.

ஜான்கர் பகுதியில் அவர மூன்று நாள்கள் சுற்றுப்பயணம் செய்து, டிசம்பர் 1ஆம் தேதி ஸ்ரீநகரில் தங்கியிருந்து இமாலய ஒட்டியுள்ள பகுதிகளையும் அவர் சுற்றிப் பார்த்துள்ளார். அதன்பிறகு டிசம்பர் 1ல் ஸ்ரீநகர் வந்தார். மேலும், அவர் சட்டவிரோதமாக சிம்கார்டையும் வாங்கி பயன்படுத்தியுள்ளார். அவரது தொலைபேசியை ஆராய்ந்தபோது சி.ஆர்.பி.எப். ராணுவ தளங்கள் மற்றும் அரசியலமைப்புச் சட்டம் 370 பற்றியும் ஆய்வு செய்துள்ளார்.

இவரை போலீஸார் கைது செய்து விசாரித்ததில் பாஸ்டன் பல்கலைக்கழகத்தில் இயற்பியலில் பட்டம் பெற்றுள்ளார், அவர் பயணம் செய்ய விரும்புவதாகக் கூறியுள்ளார். அவரது பாஸ்போர்ட்டில் அமெரிக்கா, நியூசிலாந்து, பிரேசில் மற்றும் பிஜி மற்றும் ஹாங்காங் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்குச் சென்று வந்தார்கள். அவர் விசா விதிமுறைகளை மீறியதாகவும், முடிந்தால், அவரை நாடு கடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறினர்.

**09-12-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** தாயின் ஆரோக்கியத்தில் தனிக் கவனம் செலுத்துங்கள். வாகனங்களில் அடிக்கடி பழுது ஏற்படும் அதன் காரணமாகப் பயணசுகங்கள் குறையும். நீர்நிலைகளில் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**ரிஷபம்:-** அதிக தனலாபம், புதிய நண்பர்கள், எதிர்பாலர்பால் ஈர்ப்பு மற்றும் இன்பமும் ஏற்றங்களும் ஏற்படும். தொழில் ஆர்வம் கூடுவதால், ஆதாயம் பெருகும். வெற்றியும் கிடைக்கும்.

**மிதுனம்:-** எடுத்த காரியங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படலாம். தேவையற்ற மன சஞ்சலங்கள், சலனங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. சிலருக்கு வழக்குகளால் வீண் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்:-** பல முகாந்திரங்களிலும் பண வரவு கூடும். உடல் ஆரோக்கியம் மேம்பாடு அடையும். படுக்கை சுகம், புதிய நண்பர்கள் சந்திப்பு ஆகியவை ஏற்படும். அரசாங்கத்தால் ஆதாயம் கிடைக்கும்.

**சிம்மம்:-** பணிப்பளு காரணமாக வேளைக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். முன்கோபத்தை அடக்க முன்னேற்றம் ஏற்படும். குறிக்கோளற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**கன்னி:-** பலவகைகளிலும் பணம் வந்து குவியும். திருமண ஏற்பாடுகள் நடக்கலாம். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. நண்பர்கள் சந்திப்பாலும், தெய்வ பக்தியாலும் மன நிம்மதி கூடும்.

**துலாம்:-** அதிகாரப் பதவிகள் கிடைத்து அந்தஸ்தும், மரியாதையும் உயரும் முழு மனதோடு நல்ல காரியங்களில் ஈடுபடுவதால் புகழ் ஓங்கும். தீர்த்த யாத்திரை செல்லும் பாக்கியம் ஏற்படும்..

**விருச்சிகம்:-** பாக்கிய விருத்தியால் மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். அதிகாரபதவி கிடைக்கலாம். வீட்டிலும் வசதி வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

**தனுசு:-** எதிர்பாராத வகையில் செலவுகள் ஏற்படும். பண இழப்பைத் தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள். வியாபாரிகளுக்குத் தொழிலில் இலாபம் கிட்டுவது அரிது.

**மகரம்:-** புதிய வாகன சுகங்கள் கிடைக்கும். புதிய சொத்துக்கள் அமையும். விரும்பிய பொருட்கள், விரும்பியபடிக் கிடைக்கும். கல்வியில் வெற்றிபெற கடின உழைப்புத் தேவை.

**கும்பம்:-** இனிய சுற்றுலாப் பயணங்களால் இன்பம் பெருகும். எதிர்பார்த்த இடங்களில் இருந்து தனவரவு தாராளமாகக் கிடைக்கும். பெயரும், புகழும் ஓங்கும். காரிய வெற்றி கை கொடுக்கும். .

**மீனம்:-** குழந்தைகளின் உடல் நிலையில் அக்கறை தேவை. மதிப்பு மரியாதைக் குறைவு ஏற்படும். அமைதியற்ற வாழ்க்கை அமையும். தடைபடும் காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள்.

# சீன போர் விமானத்தை விரட்டியடித்த ஜப்பான்

**டோக்கியோ, டிச. 09-**

தைவான் விவகாரத்தை தொடர்ந்து சீன போர் விமானத்தை ஜப்பான் ராணுவத்தினர் விரட்டியடித்தனர்.

பசிபிக் கடற்பகுதியில் உள்ள ஒகினாவா தீவு அருகே ஜப்பானுக்கு சொந்தமான எப்-15 போர் விமானம் பயிற்சியில் ஈடுபட்டு கொண்டிருந்தது. அப்போது சீன கடற்படை கப்பலான லியோனிங்கில் இருந்து புறப்பட்ட ஜே-15 என்ற போர் விமானம் அதன் அருகே சென்றது.

பின்னர் ரேடார் மூலம் ஜப்பான் விமானத்தை தாக்க முயன்றது. இதனையடுத்து அங்கு விரைந்த ஜப்பானிய போர் விமானங்கள் அதனை விரட்டியடித்தன. சீனாவின் இந்த அத்துமீறலுக்கு ஜப்பான் ராணுவமந்திரி ஷின்ஜிரோ கொய்சுமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆனால் சீனா தரப்பில் இதுவரை எந்தவொரு கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. தைவான் விவகாரத்தில் தலையிட்டதாக கூறி ஜப்பானுக்கு சீனா சமீபத்தில் எதிர்ப்பு தெரிவித்து இருந்தது. இதனால் இரு நாடுகளின் உறவில் விரிசலுக்கு பிறகு தற்போது மீண்டும் மோதல் ஏற்பட்டு உள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

சத்தீஸ்கரில் விபத்து:

## 5 பேர் உயிரிழப்பு

**ராய்ப்பூர், டிச. 09-**

சத்தீஸ்கர் மாநிலம் ஜாஷ்பூர் மாவட்டத்தில் ஒரு கண்காட்சிக்கு கடந்த 3 தினங்களுக்கு முன்பு சென்று விட்டு நேற்று முன்தினம் அதிகாலையில் காரில் சிலர் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தனர். பத்ரடோலி என்ற கிராமத்துக்கு அருகில் கார் வந்தபோது எதிரே வந்த லாரி மீது மோதியது.

இந்த விபத்தில் கார் அப்பளம் போல் நொறுங்கியது. இதில் காரில் வந்த 5 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இது குறித்து தகவல் அறிந்த போலீசார் அங்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இதனிடையே விபத்தை ஏற்படுத்திய லாரி டிரைவர் வாகனத்தை அங்கேயே விட்டு விட்டு தப்பி ஓடி விட்டார். இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காவலரின் கையை கடித்த த.வெ.க. தொண்டர் கைது

**தர்மபுரி, டிச. 09-**

தர்மபுரியில் காவலரின் கையை கடித்த த.வெ.க. தொண்டரை போலீசார் கைது செய்தனர்.



தர்மபுரி மாவட்டம் பாலக்கோட்டில் கடந்த வாரம் மனமகிழ் மன்றம் என்ற பெயரில் தனியார் மதுபான பார் திறக்கப்பட்டது. இதற்கு அந்த பகுதி பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த நிலையில் பாலக்கோட்டில் தனியார் மதுபான பார் திறக்கப்பட்டதை கண்டித்தும், அந்த பாரை உடனடியாக மூட வலியுறுத்தியும் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் தாபா சிவா தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது. தர்மபுரி மாவட்டத்தில் மனமகிழ் மன்றம் என்ற பெயரில் இதேபோன்று 12 தனியார் மதுபான பார்களும், தமிழகம் முழுவதும் ஆயிரக்கணக்கான தனியார் மதுபான பார்களையும் திறக்க தமிழக அரசு தீவிர முயற்சி மேற்கொள்வதாக கூறியும், இதை கண்டித்தும், அரசு மதுபான கடைகள் மற்றும் பார்களை உடனடியாக மூடக்கோரியும் அவர்கள் கோஷங்கள் எழுப்பினர். இதனிடையே த.வெ.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அந்த தனியார் மதுபான பாருக்குள் புகுந்து முற்றுகை போராட்டத்தில் ஈடுபட முயன்றனர். அப்போது போலீசாரின் தடையை மீறி கதவை உடைத்து கொண்டு உள்ளே புகுந்த கட்சி தொண்டர்கள் அரசுக்கு எதிராகவும், போலீசாருக்கு எதிராகவும் கண்டன கோஷங்கள் எழுப்பினர்.

அப்போது போலீசாருக்கும், த.வெ.க.வினருக்கும் வாக்குவாதம் முற்றி தள்ளுமுள்ளானது. இதில் முற்றுகையிட வந்தவர்களை தடுக்க முயன்ற மகேந்திர மங்கலம் போலீஸ் ஏட்டு அருள் என்பவரது கையை த.வெ.க. தொண்டர் கடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதில் காவலருக்கு அதிர்ஷ்டவசமாக காயம் ஏற்படவில்லை. பின்னர் த.வெ.க.வினர் அந்த பார் முன்பு தரையில் அமர்ந்து முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். இதைத்தொடர்ந்து 16 பெண்கள் உள்பட 105 பேரை போலீசார் அதிரடியாக கைது செய்தனர். பின்னர் அவர்கள் அனைவரும் அருகில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் காவலில் வைக்கப்பட்டு மாலையில் விடுவிக்கப்பட்டனர். இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனிடையே போராட்டத்தின்போது போலீஸ் ஏட்டுவின் கையை த.வெ.க. தொண்டர் கடித்த வீடியோ காட்சி சமூக வலைதளங்களில் வைரலானது. இந்த நிலையில் போராட்டத்தின் போது காவலரின் கையைக் கடித்த த.வெ.க. தொண்டர் ஜெமினி என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் காவலர்களுடன் தள்ளுமுள்ளுவில் ஈடுபட்ட விவகாரத்தில் த.வெ.க.வினர் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### பல்கலை., பட்டமளிப்பு விழா:

# கவர்னரை அவமதிப்பது ஏற்புடையதல்ல: ஐகோர்ட்

**மதுரை, டிச. 09-**

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை.பட்டமளிப்பு விழாவில் கவர்னரை அவமதிப்பது ஏற்புடையதல்ல என்று ஐகோர்ட் மதுரை கிளை தெரிவித்துள்ளது.

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை. பட்டமளிப்பு விழா இந்தாண்டு ஆகஸ்டு 13ம் தேதி நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக கவர்னர் ஆர்.என்.ரவி, பட்டச்சான்றுகளை மாணவ, மாணவியருக்கு வழங்கினார்.

அப்போது முனைவர் பட்டம் பெற வந்த மாணவி ஜீன் ஜோசப் கவர்னர் ரவியிடம் பட்டம் பெறாமல், அருகில் இருந்த துணைவேந்தர் சந்திரசேகரிடம் பட்டச்சான்றை காட்டி விட்டு மேடையில் இருந்து இறங்கினார். அனைவரது முன்னிலையில் சபை நாகரிகம் இன்றி அவர் நடந்து கொண்ட இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

'கவர்னர் ரவி, தமிழகத்துக்கும், தமிழர்களுக்கும் எதிராக செயல்பட்டு வருகிறார். அதனால் அவரிடம் பட்டம் பெற விரும்பவில்லை' என்றும் ஜீன் ஜோசப் சமூக வலைதளங்களில் கருத்து தெரிவித்தார். விசாரணையில், அவர் நாகர்கோவில் நகர தி.மு.க. துணை செயலாளர் ராஜன் என்பவரது மனைவி என்பது தெரியவந்தது. இந்த சர்ச்சையை தொடர்ந்து, பல்கலை வேந்தரான கவர்னரிடம் பட்டம் பெற மறுத்த அவமதித்த மாணவி ஜீன்ஜோசப்பின் முனைவர் பட்டத்தை ரத்து செய்யக்கோரி ஐகோர்ட் மதுரை கிளையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

மாணவியின் பட்டத்தை ரத்து செய்யக்கோரி தூத்துக்குடி ராம்குமார் ஆதித்யன் மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளார். பட்டமளிப்பு விழா அரசியல் போராட்டத்திற்கான களம் அல்ல என்று மனுதாரர் முறையிட்டு செய்தார்.

இந்தநிலையில், இந்த மனு குறித்து விசாரித்த மதுரை ஐகோர்ட், பல்கலை. பட்டமளிப்பு விழாவில் கவர்னரை அவமதிக்கும் வகையில் மாணவி நடந்து கொண்டது ஏற்புடையதல்ல. இதை ஒருபோதும் ஏற்க முடியாது. இதற்குரிய வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க வேண்டும். பல்கலைக்கழகத்தின் மாண்பை காக்க வேண்டும்.

இளைய தலைமுறைகளுக்கு உரிய வழிகாட்ட வேண்டும். இதுபோல செயல்பட்டவர்கள் மீது துணைவேந்தர் நடவடிக்கை எடுக்க பல்கலை. விதியில் அதிகாரம் உள்ளதா? மனுதாரர் மற்றும் பல்கலை. வழக்கறிஞர் பதில் தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கை டிசம்பர் 18-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. வழக்கு விசாரணைக்கு உகந்ததா, இல்லையா என்பதை டிச.18-ல் முடிவு செய்கிறது மதுரை ஐகோர்ட்.

## சத்தீஷ்கரில் 12 நக்சலைட்டுகள் சரண்

**ராய்ப்பூர், டிச. 09-**

சத்தீஷ்கர் மாநிலத்தில் 12 நக்சலைட்டுகள் போலீசில் சரண் அடைந்தனர்.

சத்தீஷ்கர், மராட்டியம், ஜார்க்கண்ட், ஒடிசா, மத்தியபிரதேசம், தெலுங்கானா, ஆந்திரா உள்பட பல்வேறு மாநிலங்களில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகள் அதிகம் உள்ளது. நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு போலீஸ் படையுடன், மத்திய பாதுகாப்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அடுத்த ஆண்டு மார்ச் 31ம் தேதிக்குள் நாட்டில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை முழுவதும் ஒழிக்க மத்திய அரசு காலக்கெடு நிர்ணயித்துள்ளது. இதையடுத்து, மாவோயிஸ்டுகள், நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டோ, சரண் அடைந்தோ வருகின்றனர். சரணடையும் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளுக்கு மாநில அரசுகள் மறுவாழ்வு திட்டங்களை அமல்படுத்தி வருகின்றன.

இந்நிலையில், சத்தீஷ்கர் மாநிலத்தை சேர்ந்த 12 நக்சலைட்டுகள் நேற்று ஆயுதங்களை கைவிட்டு போலீசில் சரணடைந்துள்ளனர். அம்மாநிலத்தின் கைராகர் சுய்கா டன் கண்டாய் மாவட்டத்தை சேர்ந்த பெண்கள் உள்பட 12 நக்சலைட்டுகள் சரணடைந்துள்ளனர். சரணடைந்தவர்களில் ரமந்ஹர் மாஜி என்ற நக்சலைட்டின் தலைக்கு ரூ. 1 கோடி சன்மானம் அறிவிக்கப்பட்டிருந்தது என போலீசார் தெரிவித்துள்ளனர்.

## செந்தில் பாலாஜிக்கு கூடுதல் ஜாமீன் தளர்வுகளை வழங்கிய சுப்ரீம் கோர்ட்

**புதுடெல்லி, டிச. 09-**

அரசு வேலை வாங்கி தர பணம் பெற்றதாக எழுந்த குற்றச்சாட்டில் செந்தில் பாலாஜிக்கு சுப்ரீம் கோர்ட் ஜாமீன் தளர்வுகளை வழங்கியுள்ளது.

அமலாக்கத்துறை விசாரணைக்காக அழைக்கும்போது அதிலிருந்து விலக்கு தேவை என்றால் செந்தில் பாலாஜி சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தை அனுகலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்க செந்தில்பாலாஜி தரப்புக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும் என அமலாக்கத்துறை சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

செந்தில் பாலாஜி வழக்கிற்கு இடைஞ்சலாக இருக்கிறார் என்றால் நீங்கள் நீதிமன்றத்தை நாடலாம் எனவும் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

# தமிழ்நாட்டிலும் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமைக்கும்

### மத்திய அமைச்சர் அமித்ஷா நம்பிக்கை

**அகமதாபாத், டிச. 09-**



தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று மத்திய அமைச்சர் அமித்ஷா கூறினார்.

குஜராத் மாநிலம் ஆமதாபாத் மாநகராட்சி நிகழ்ச்சியில், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கலந்து கொண்டார். ரூ.1,500 கோடி மதிப்பிலான 3 விளையாட்டு வளாகங்கள் உள்பட பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், தொடங்கியும் வைத்தார். நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:-

கடந்த 2014-ம் ஆண்டு மக்களவை தேர்தல் முதல் 2025-ம் ஆண்டுவரை பாஜனதாவின் வெற்றி பயணம் தொடருகிறது. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் நரேந்திர மோடி, 3-வது முறையாக பிரதமராகி சாதனை படைத்தார். பீகாரில் மூன்றில் இருபங்கு பெரும்பான்மையுடன் பா.ஜனதா கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது. இருப்பினும், ராகுல்காந்தி மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களையும், வாக்காளர் பட்டியலையும் குறைகூறிக்கொண்டிருக்கிறார். ஆனால் காங்கிரசையும், அதன் கூட்டணி கட்சிகளையும் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. மராட்டியம், அரியானா, டெல்லி ஆகியவற்றை தொடர்ந்து பீகாரிலும் காங்கிரஸ் கட்சி துடைத்து எறியப்பட்டுவிட்டது. ஒவ்வொரு மூலை, முடுக்கிலும் காங்கிரசையும், அதன் கூட்டணி கட்சிகளையும் மக்கள் நிராகரித்து வருகிறார்கள்.

இந்த மேடையில் இருந்து முதல்வர்கள் மம்தா பானர்ஜி, மு.க.ஸ்டாலின் ஆகியோர் தயாராக இருக்குமாறு சொல்லிக்கொள்கிறேன். அடுத்து மேற்கு வங்காளத்திலும், தமிழ்நாட்டிலும் பா.ஜனதா கூட்டணி தான் மக்கள் ஆதரவுடன் அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைக்கப்போகிறது. தேர்தல் முடிவுகள் வரட்டும். மேற்கு வங்காளத்திலும், தமிழ்நாட்டிலும் திரிணாமுல் காங்கிரசும், தி.மு.க.வும் துடைத்து எறியப்படும். அயோத்தியில் ராமர் கோவிலில் கட்டி முடித்த நிலையில், சீதா தேவி பிறந்த பீகார் மாநிலம் சீதாமரியில் சீதா தேவிக்கு கோவில் கட்டப்படும். 4 மாதங்களுக்கு முன்பு அடிக்கல் நாட்டப்பட்டது. 2026-ம் ஆண்டுக்குள் கோவில் கட்டி முடிக்கப்படும்.

ஆமதாபாத்தில் 2029-ம் ஆண்டு உலக போலீஸ் மற்றும் தீயணைப்பு வீரர்களுக்கான விளையாட்டு போட்டிகள் நடைபெறும். 2030-ம் ஆண்டு அங்கு காமன்வெல்த் போட்டிகள் நடத்தப்படும். 2036-ம் ஆண்டு ஆமதாபாத்தில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும். அதன் மூலம் சர்வதேச விளையாட்டு வரைபடத்தில் ஆமதாபாத் முக்கிய இடம்பெறும். இவ்வாறு அவர் பேசினார்.

### இண்டிகோ குளறுபடிகள் குறித்து

# பார்லி. மாநிலங்களவையில் மத்திய அமைச்சர் விளக்கம்

**புதுடெல்லி, டிச. 09-**

திட்டமிடலில் ஏற்பட்ட தவறுகளே இண்டிகோ விமான நிறுவனத்தின் குளறுபடிக்கு காரணம் என்று மாநிலங்களவையில் மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம் மோகன் நாயுடு திங்கள்கிழமை விளக்கம் அளித்தார்.

விமானிகளுக்கான திருத்தப்பட்ட பணி நேரக் கட்டுப்பாட்டு விதிகள் (எஃப்டிடிஎல்) அமலுக்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து, கடந்த ஒரு வாரமாக இண்டிகோ நிறுவனத்தின் ஆயிரக்கணக்கான விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதுதொடர்பாக மாநிலங்களவையில் எம்பிக்கள் எழுப்பிய கேள்விகளுக்கு மத்திய அமைச்சர் ராம் மோகன் நாயுடு நேற்று பதில் அளித்து பேசினார். அவர் பேசியதாவது: "இண்டிகோ நிறுவனத்தின் விமானிகள் மற்றும் விமானப் பணியாளர்களின் அட்டவணை மற்றும் உள் திட்டமிடலில் ஏற்பட்ட தவறுகளே குளறுபடிக்கு காரணம். கடந்த டிசம்பர் 1 ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் கூட, விமானிகளுக்கான திருத்தப்பட்ட பணி நேரக் கட்டுப்பாட்டு விதிகள் தொடர்பாக எவ்வித ஆட்சேபனையும் இண்டிகோ நிறுவனம் தெரிவிக்கவில்லை.

விமானப் போக்குவரத்து துறையில் அதிகமான நிறுவனங்கள் வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்தியாவில் தற்போது 5 பெரிய நிறுவனங்கள் மட்டுமே உள்ளன. அதுவும் அமைச்சகம் தரப்பில் மேற்கொண்ட முயற்சியின் விளைவாகும். தாமதங்கள் மற்றும் ரத்துகளால் சிரமப்பட்ட அனைத்து பயணிகளுக்கும் உதவ கடுமையான சிவில் விமானப் போக்குவரத்து தேவை விதிகள் உள்ளன. இதனை விமான நிறுவனங்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

மென்பொருள் பிரச்னை குறித்து விசாரணை நடத்தப்பட்டுள்ளது. விமானப் போக்குவரத்து துறையில் தொடர்ச்சியாக தொழில்நுட்ப மேம்பாடு நடந்து வருகிறது. நாட்டின் விமான போக்குவரத்துத் துறை உலகத் தரம் வாய்ந்த உயர்ந்த தரநிலைகளை கொண்டு வருவதே அரசின் தொலைநோக்குப் பார்வை. கடந்த 3 நாள்களில் மட்டும் 5,86,705 இண்டிகோ பயணிகளுக்கு அவர்களின் பயணச்சீட்டுத் தொகையான ரூ. 569 கோடி திருப்பி அளிக்கப்பட்டுள்ளது." எனத் தெரிவித்துள்ளார்.

# த.வெ.க. சின்னம் குறித்து செங்கோட்டையன் தகவல்

**கோபி செட்டி பாளையம், டிச. 09-**

த.வெ.க. சின்னம் குறித்து எனக்கு தெரியும் என்று செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

த.வெ.க தலைமை நிர்வாக குழு ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் பேசியதாவது:- நாமக்கல் மாவட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேசும் போது, பெரிய கட்சி நம்மிடத்தில் வந்துவிட்டது.. அங்கே கொடி அசைத்து கொண்டிருக்கிறார்கள்.. பிள்ளையார் சுழி போட்டாச்சு என்றார்.. ஆனால் இப்போது பிள்ளையார் சுழி போடவில்லை.. வேறு சுழி போடப்பட்டிருக்கிறது. எல்லோரின் முதுகிலும் ஏறி சவாரி செய்யலாம் என்று சிலர் கனவு கண்டார்கள்.

ஆனால் மக்களின் சக்தி விஜய்யை தமிழ்நாட்டின் முதல்வராக அமர வைப்பார்கள். மக்கள் சக்திக்கு யாராலும் தடைபோட முடியாது. இந்த கிராமத்தில் கூடிய கூட்டம் போல், விஜய்க்கு ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டம் கூடுகிறது. ஒவ்வொரு குழந்தையும் பெற்றோரை விஜய்க்கு வாக்கு போட சொல்கிறார்கள். ஆண்ட கட்சிகளே தான் ஆள வேண்டுமா? மற்றவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கக் கூடாதா?

ஏன் விஜய் ஆட்சிக்கு வரக் கூடாது? நல்லாட்சியை கொடுக்கக் கூடிய புதிய முகத்தை மக்கள் தேடிக் கொண்டே இருந்தார்கள். அந்த முகம் கிடைத்துவிட்டது.. என்னை யாராலும் சாய்த்துவிட முடியாது.. சாய்க்க நினைப்பவர்கள் சாய்ந்து போவார்கள்.. நான் என்று ஒருவன் நினைத்தால், ஆண்டவன் தான் என்று காட்டிவிடுவான்.. மிக விரைவிலேயே த.வெ.க.வுக்கு சின்னம் கிடைக்கப் போகிறது. அது எனக்கு நன்றாக தெரியும்.. ஆனால் வெளியில் சொல்லக் கூடாது.. அந்த சின்னத்தை பார்த்த பிறகு தான் நாடே வியப்படைய போகிறது.. அஞ்சப் போகிறது.. ஏனென்றால் இந்த சின்னத்தை வெல்வதற்கு இனி தமிழ்நாட்டில் எந்த இயக்கத்தாலும் முடியாது" என்று கூறினார்.

### கரூர் நெரிசல் சம்பவம் குறித்து

# த.வெ.க. சேலம் கிழக்கு மாவட்ட செயலாளரிடம் சி.பி.ஐ. விசாரணை

**கரூர், டிச. 09-**



கரூர் சம்பவத்தை தொடர்ந்து சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் வெங்கடேசனிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 27-ந் தேதி நடைபெற்ற த.வெ.க. பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியாகினர். 100-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இந்த வழக்கு தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரிகள் தாந்தோணிமலையில் உள்ள அரசு சுற்றுலா மாளிகையில் தங்கி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை ஆம்புலன்ஸ் உரிமையாளர்கள், டிரைவர்கள், பொதுமக்கள், போலீசார், மத்திய மின்வாரிய அதிகாரிகள், த.வெ.க. நிர்வாகிகள் உள்பட ஏராளமானோரிடம் விசாரணை நடத்தினர்.

இந்நிலையில் கடந்த வாரம் சுப்ரீம்கோர்ட்டு ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையிலான கண்காணிப்பு குழுவினர் கரூர் வருகை புரிந்து பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்றனர். இந்நிலையில் கண்காணிப்பு குழுவிடம் மனுக்கள் அளித்த தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையின் கரூர் மாவட்ட செயலாளர் அருள்குமார், புதிய திராவிடர் கழக மாவட்ட செயலாளர் சந்தோஷ்குமார் உள்பட 6 பேரிடம் நேற்று முன்தினம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினர். இந்த நிலையில், கரூர் சி.பி.ஐ. அலுவலகத்தில் த.வெ.க. சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் வெங்கடேசன் உள்ளிட்ட 5 நிர்வாகிகள் விசாரணைக்கு நேற்று ஆஜராகினர். அவர்களிடம் கரூர் கூட்ட நெரிசல் தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

# பாலியல் வழக்கு என் திரைத்துறை வளர்ச்சியை அழித்துவிட்டது

### விடுதலைக்கு பிறகு நடிகர் திலீப் பேட்டி

**திருவனந்தபுரம், டிச. 09-**



என் மீதான பாலியல் வழக்கு என் திரைத்துறை வளர்ச்சியை அழித்துவிட்டது என நடிகர் திலீப் வேதனை தெரிவித்துள்ளார்.

கடந்த 2017ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17ஆம் தேதி கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் படப்பிடிப்பை முடித்துக் கொண்டு காரில் வீட்டுக்குச் சென்ற போது, நடிகையை ஒரு கும்பல் கடத்தி ஓடும் காரில் பாலியல் தொல்லை கொடுத்து அதனை விடியோ பதிவு செய்ததாக புகார் அளிக்கப்பட்டது.

இது குறித்து கேரள காவல்துறை விசாரணை நடத்தி, நடிகர் திலீப்பின் தூண்டுதலின் பேரிலேயே இந்த சம்பவம் நடந்ததாக காவல்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.இதில், நடிகையின் கார் ஓட்டுநர், உதவியாளர்களும் முக்கிய குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டனர். 8 ஆண்டுகள் நீடித்த இந்த வழக்கில் விசாரணைக்குப் பிறகு நேற்று எர்ணாகுளம் முதன்மை அமர்வு நீதிபதி ஹனி எம். வர்கீஸ் தீர்ப்பளித்தார். அதில், திலீப்பிற்கு எதிராக போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறி விடுவித்தார்.

வழக்கில் ஏ1 முதல் ஏ6 வரையிலான குற்றம்சாட்டப்பட்ட வர்களை குற்றவாளிகள் என அறிவித்த நீதிபதி, குற்றம் சாட்டப்பட்ட 8-வது நபரான நடிகர் திலீப்பை விடுவித்துள்ளார். இந்த தீர்ப்புக்கு பிறகு செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த நடிகர் திலீப் கூறியதாவது; எனக்கு உறுதுணையாக இருந்த ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என் மீதான பாலியல் வழக்கு என் திரைத்துறை வளர்ச்சியை அழித்துவிட்டது. எனக்காக வாதிட்ட வழக்கறிஞர்கள், ஆதரவாக இருந்த நண்பர்கள் அனைவருக்கும் நன்றி" என்றார்.

# செங்கோட்டை குண்டுவெடிப்பு வழக்கு: 4 பேருக்கு என்.ஐ.ஏ. காவல் நீட்டிப்பு

**புது டெல்லி, டிச. 09-**

டெல்லி செங்கோட்டை அருகே நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட நான்கு பேரின் தேசிய புலனாய்வு விசாரணைக் காவல் மேலும் 4 நாள்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றம் வழங்கிய 10 நாள்கள் தேசிய புலனாய்வு அமைப்பின் விசாரணைக் காவல் நிறைவு பெற்ற நிலையில், டெல்லி செங்கோட்டை அருகே கார் குண்டுவெடிப்புத் தாக்குதல் நடத்திய சம்பவத்தில் தொடர்புடையதாகக் கைது செய்யப்பட்ட டாக்டர் முஸாம்மில், டாக்டர் அதீல், டாக்டர் ஷாஹீன், மற்றும் மௌல்வி இர்ஃபான் அகமது ஆகியோர், நேற்று முதன்மை அமர்வில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்க ஊடகத் துறையினருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. பாட்டியாலா மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் கடுமையான பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது. இந்த வழக்கில், மருத்துவர்கள் உள்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்கொலைப் படைத் தாக்குதலில் ஈடுபட்ட உமர் உன் நபி-உடன் தொடர்பிலிருந்தவர்கள், அடைக்கலம் கொடுத்தவர்கள், உதவியவர்கள் என பல தரப்பிலும் சோதனைகள் நடத்தப்பட்டு விசாரணை தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த நவம்பர் 10ஆம் தேதி, டெல்லி செங்கோட்டை அருகே, வெடிபொருள்களுடன் வந்த ஐ20 காரை ஓட்டி வந்த டாக்டர் உமர்-உன்-நபி, காரை வெடிக்க வைத்த சம்பவத்தில் 15 பேர் கொல்லப்பட்டனர், பலர் படுகாயமடைந்தனர்.

### புதுச்சேரியில் இன்று நடைபெறும்

# பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் த.வெ.க.தலைவர் விஜய் பேசுகிறார்

### 10 ஆயிரம் பேர் மட்டுமே பங்கேற்க அனுமதி

**புதுச்சேரி, டிச. 09-**



புதுச்சேரியில் இன்று நடைபெறவுள்ள பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் த.வெ.க. தலைவர் விஜய் பேசுகிறார். இதில் 10 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதிக்க வாய்ப்பு உள்ளது.

தமிழக வெற்றிக்கழக தலைவரான நடிகர் விஜய் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை சந்திப்பதற்கு தீவிரமாக தயாராகி வருகிறார். கடந்த செப்டம்பர் மாதம் திருச்சியில் தனது சுற்றுப்பயணத்தை தொடங்கிய விஜய் நாகப்பட்டினம், திருவாரூர் பகுதிகளில் மக்களை சந்தித்தார். விஜய் பங்கேற்ற கூட்டங்களில் திரளாக மக்கள் பங்கேற்று ஆதரவு அளித்தனர்.

3-வது நிகழ்ச்சியாக கடந்த செப்டம்பர் மாதம் 27-ந்தேதி கரூரில் திறந்த வேனில் நின்றபடி அவர் மக்களை சந்தித்து உரையாற்றினார். இந்த கூட்டத்தில் அலைகடலென த.வெ.க. தொண்டர்களும், பொதுமக்களும் பங்கேற்றனர். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்துக்கு பிறகு விஜய்யின் சுற்றுப்பயணம் தள்ளி வைக்கப்பட்டிருந்தது.

காஞ்சிபுரத்தில் கடந்த மாதம் 2 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்ட உள்ளரங்க கூட்டத்தில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் விஜய் பேசினார். இந்த நிலையில் 2 மாதங்களுக்கு பிறகு விஜய் பொதுக்கூட்டத்தில் பங்கேற்கிறார். இந்த கூட்டம் பக்கத்து மாநிலமான புதுவையில் நடைபெறுகிறது. புதுவையில் ரோடு-ஷோ சென்று மக்களை சந்திப்பதாக முதலில் திட்டமிடப்பட்டது.

ஆனால் பாதுகாப்பு காரணங்களை சுட்டிக்காட்டி புதுவை போலீசார் ரோடு-ஷோவுக்கு அனுமதி அளிக்கவில்லை. இதையடுத்து விஜய்யின் பிரமாண்ட பொதுக் கூட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

5 ஆயிரம் பேர் மட்டுமே பங்கேற்க வேண்டும் என்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதையடுத்து த.வெ.க. பொதுச்செயலாளர் என்.ஆனந்த், முதல்வர் ரங்கசாமியை சந்தித்து, துறைமுக வளாகத்தின் முழு பகுதியையும் பொதுக்கூட்டம் நடத்த வழங்கும்படியும், 10 ஆயிரம் பேர் பங்கேற்க அனுமதிக்கும்படியும் கோரினார். இதைத் தொடர்ந்து த.வெ. க.வின் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதையடுத்து துறைமுக வளாகம் முழுவதும் தண்ணீரை வெளியேற்றி சமன் செய்யும் பணி தொடங்கி உள்ளது. டிராக்டர்கள் மூலம் மணல் கொட்டப்பட்டு பொக்லைன் எந்திரங்கள் மூலம் துறைமுக வளாகம் தண்ணீர் தேங்காதவாறு சமன்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் விஜய் பங்கேற்ற பொதுக்கூட்டங்களில் மேடையும், தொண்டர்களை பார்ப்பதற்காக, நடந்து வந்து செல்வதற்கு பாதையும் அமைக்கப்படும். ஆனால் புதுவை பொதுக்கூட்டத்துக்கு மேடை அமைக்கப்படவில்லை. அதற்கு பதிலாக விஜய் பிரசார வாகனத்தில் இருந்தே பேச உள்ளார். இதற்காக நேற்று இரவு பிரசார வாகனம் புதுவை சென்றது. கியூ.ஆர்.கோடுடன் 10 ஆயிரம் பேரை மட்டுமே அனுமதிக்க உள்ளனர். சுமார் 45 நிமிடம் த.வெ.க. தலைவர் விஜய் பேச திட்டமிட்டுள்ளார். 2 மாதத்துக்கு பிறகு புதுச்சேரியில் பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது த.வெ.க. நிர்வாகிகள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

# அண்ணாமலை - ஓ.பி.எஸ். சந்திப்பு

**கோவை, டிச. 09-**

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன. பிரசாரம், பொதுக்கூட்டம், நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை, கட்சி கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துதல் என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக்குழு என்ற அமைப்பை தொடங்கினார். மேலும், இந்த அமைப்பு பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றிருந்தது. ஆனால், கடந்த ஜூலை மாதம் பாஜக கூட்டணியில் இருந்து விலகினார். மேலும், அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து வரும் 15ம் தேதி முடிவு அறிவிக்கப்படும் என்றார். ஓ. பன்னீர் செல்வம் கடந்த சில நாட்களுக்கும் டெல்லி சென்றார். டெல்லியில் பாஜக மூத்த தலைவர் அமித்ஷாவை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

கோவையில் பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலையை , ஓ. பன்னீர் செல்வம் நேற்று முன்தினம் சந்தித்தார். கோவையில் நடைபெற்ற அதிமுக தொண்டர்கள் மீட்புக்குழு நிர்வாகி இல்ல திருமண நிகழ்ச்சியில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முதல் கையெழுத்து கடற்கரையில் உள்ள சமாதிகளை அகற்றுவோம். மிகப்பெரிய இரு பதவிகளை குடும்பமே வகித்து வருகிறது. பெரும்பான்மையான சமூகத்தினர் குறைவான அமைச்சர் பதவி வகித்து வருகிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் குறைந்தபட்சம் 10 லட்சம் ஏக்கர் நிலமாவது மீட்போம்.

**- சீமான்**



பிரதமர் மோடி பேச்சில் உண்மையில்லை. முன்னுக்கு பின் முரண் உள்ளது. இந்தியாவின் வளர்ச்சிக்கு நேரு அமைத்து தந்த அடித்தளம்தான் காரணம்.நேரு குறித்து குறை கூறுவதையே வழக்கமாக வைத்துள்ளார் பிரதமர் மோடி. நாட்டின் முக்கிய பிரச்சினைகளில் இருந்து திசை திருப்பவே பாஜக அரசு வந்தே மாதரம் குறித்து விவாதம் நடத்துகிறது.

**- பிரியங்கா**



தமிழக சட்டமன்றத் தேர்தலில் 4 முனைப் போட்டி நிலவ வாய்ப்புள்ளது. புதிய வரவான தமிழக வெற்றிக் கழகம் தங்களது தலைமையில் புதிய அணியை வலுவாக கட்டமைக்க முயற்சி செய்து வருகிறது. ஏற்கெனவே வலுவாக உள்ள தி.மு.க., தே.ஜ.க. கூட்டணியிலுள்ள சில கட்சிகளுடனும் த.வெ.க. கூட்டணிக்காக பேசி வருகிறது.

**- டி.டி.வி.தினகரன்**



வளர்ச்சி அரசியலை முன்னெடுத்துள்ளதாக மேடைதோறும் பெருமை பேசும் முதல்வர் மதுரைக்காக முன்னெடுத்தது என்ன? கொடுத்த வாக்குறுதிப்படி வேளாண் பல்கலைக்கழகம் அமைக்காதது, தப்பும் தவறுமாகத் திட்ட அறிக்கை தயாரித்து மெட்ரோ திட்டத்தைத் தாமதமாக்கியது என மதுரையின் வளர்ச்சியைக் காவு வாங்கியுள்ளது அரசு.

**- நயினார் நாகேந்திரன்**

# காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் மகா கும்பாபிஷேகம்: ஏராளமான பக்தர்கள் தரிசனம்



**காஞ்சிபுரம், டிச. 9 –**

காஞ்சிபுரத்தில் உள்ள பிரசித்தி பெற்ற ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் மகா கும்பாபிஷேகம் 18 ஆண்டுகளுக்குப் பிறகு நேற்று வெகு விமர்சையாக நடந்தது. லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பஞ்சபூத ஸ்தலங்களில் நிலத்துக்குரியதாக போற்றப்படும் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் மகா கும்பாபிஷேகம் நேற்று அதிகாலையில் விமரிசையாக நடந்தது.

வரலாற்றுப் பெருமையும்,புராணச் சிறப்பும் உடையது காஞ்சிபுரத்தில் உள்ள ஏலவார்குழலி சமேத ஏகாம்பரநாதர் கோயில்.பஞ்சபூத ஸ்தலங்களில் நிலத்துக்குரியதாகவும் போற்றப்படும் இக்கோயிலுக்கு மகா கும்பாபிஷேகம் செய்வதற்கான திருப்பணிகள் ரூ.29 கோடி மதிப்பில் நடைபெற்று முடிந்துள்ளது. கடந்த மாதம் 28ம் தேதி பாலாலயம் நடத்தப்பட்டு நேற்று மகா கும்பாபிஷேகம் நடைபெறும் என, அறநிலையத் துறை அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து ஆலய வளாகத்தில் உள்ள சிவகங்கை தீர்த்தக்குளம் அருகே 170 சிவாச்சாரியார்கள்,170 வேத விற்பன்னர்கள் ஒரே நேரத்தில் அமர்ந்து யாக சாலை பூஜைகளை செய்யும் வகையில் பிரம்மாண்டமான நவகுண்ட யாகசாலை மண்டபம் அமைக்கப்பட்டது. யாக சாலை பூஜைகள் கடந்த 4ம் தேதி அனுக்கை விக்னேசுவர பூஜையுடன் தொடங்கியது. இதன் தொடர்ச்சியாக கடந்த 5. 6, 7 ஆகிய தேதிகளில் விசேஷ சந்தி யாக பூஜைகளும் நடைபெற்றன. யாக சாலை பூஜைகளை கோயில் ஸ்தானீகர்கள், ஸ்தலத்தார்கள் நடத்தினார்கள். 30க்கும் மேற்பட்ட ஓதுவா மூர்த்திகள் பக்க இசைக் கலைஞர்களுடன் திருமுறைப் பாராயணமும் பாடினார்கள்.

நேற்று அதிகாலை 5 மணிக்கு யாக சாலையிலிருந்து புனித நீர்க்குடங்கள் கோபுரங்களுக்கு ஏராளமான சிவ வாத்தியங்கள், மங்கல மேள வாத்தியங்கள் இசைக்க எடுத்துச் செல்லப்பட்டு காலை 6.10 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தின் போது மூலவர் கோபுரத்தின் மீது காஞ்சி சங்கராச்சாரியார் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், இளைய பீடாதிபதி சத்திய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆகியோர் முன்னிலையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து மூலவருக்கும், பரிவார தெய்வங்களுக்கும் சிறப்பு அபிஷேகமும், அலங்கார தீபாராதனைகளும் நடைபெற்றன. இதற்கான ஏற்பாடுகளை கோயில் அறங்காவலர் குழுவின் தலைவர் வேல்மோகன் தலைமையில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள், இணை ஆணையர் சி.குமரதுரை, கோயில் செயல் அலுவலர் ப.முத்துலட்சுமி ஆகியோர் தலைமையில் விழாக் குழுவினரும் கோயில் பணியாளர்களும் செய்திருந்தனர். ஆன்மீக சொற்பொழிவாளர் தேச மங்கையர்க்கரசி கும்பாபிஷேகத்தை நேர்முக வர்ணனை செய்தார்.

விழாவில் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் சிதம்பரநாத சுவாமிகள், தர்மபுரம் ஆதீனம் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வேல்முருகன், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் எழிலரசன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.காஞ்சிபுரம் எஸ். பி., சண்முகம் தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். கும்பாபிஷேகத்தை ஒட்டி ஆலயம் முழுவதும் வண்ண மின் விளக்குகளாலும் வண்ண மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. காஞ்சிபுரம் நகரில் பல்வேறு இடங்களில் வணிக நிறுவனங்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் சார்பில் அன்னதானமும் நடைபெற்றது.

# திண்டுக்கல் மாவட்டம், திருஆவினன்குடி குழந்தை வேலாயுத சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு விழா: அமைச்சர்கள் அர.சக்கரபாணி, பி.கே.சேகர்பாபு பங்கேற்பு



**சென்னை,டிச.09**

உணவு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி மற்றும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு ஆகியோர் இன்று (08.12.2025) திண்டுக்கல் மாவட்டம், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருஆவினன்குடி அருள்மிகு குழந்தை வேலாயுத சுவாமி திருக்கோயிலின் குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் 2025-26 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற அறிவிப்புகளை நிறைவேற்றிடும் வகையில் மலைக் கோயிலில் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகளையும், திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் விடுதி மாணவ, மாணவியருக்கு கட்டணமில்லாமல் உணவு வழங்குதல், அனைத்து மாணவர்களுக்கும் கல்வி உபகரணங்கள் வழங்குதல் மற்றும் கண் பரிசோதனைத் திட்டம் ஆகியவற்றை தொடங்கி வைத்தனர்.

மேலும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, கொடைக்கானல் அருள்மிகு குறிஞ்சியாண்டவர் திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தொன்மை வாய்ந்த திருக்கோயில்களில் ஒன்றான திண்டுக்கல் மாவட்டம், திருஆவினன்குடி அருள்மிகு குழந்தை வேலாயுத சுவாமி திருக்கோயிலுக்கு ரூ. 4.20 கோடியில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு இன்று குடமுழுக்கு நடைபெற்றது. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபக்கோயில்களான 50 திருக்கோயில்களுக்கும் ஆகம விதிப்படி, குடமுழுக்கு வரும் பிப்ரவரி மாதத்திற்குள் நடத்தி முடிக்கப்படும். திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றபின் இதுவரை 3,927 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. நான்காயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயிலான காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில் உள்பட 25 திருக்கோயில்களுக்கு இன்று வெகுவிமரிசையாக குடமுழுக்கு நடைபெற்றுள்ளது, நேற்றைக்கு முன்தினம் காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலுக்கு 33 கிலோ கிராம் எடையுள்ள தங்கத்தினை கொண்டு உருவாக்கப்பட்ட தங்க ரதம் உபயமாக பெறப்பட்டுள்ளது.

2025-26 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்புகளை நிறைவேற்றிடும் வகையில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி மகளிர் கலைக் கல்லூரியில் திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் 2 பள்ளிகள் மற்றும் 4 கல்லூரிகளில் பயிலும் 6,000 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் புத்தகப் பையுடன் கூடிய கல்வி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தையும், மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை மற்றும் மதுரை ஸ்ரீ ராமச்சந்திரா கண் மருத்துவனைகளின் மூலம் மாணவ, மாணவியருக்கு கட்டணமில்லா கண் பரிசோதனை முகாமினையும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஏற்கனவே காலைச் சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கப்படுவதை தொடர்ந்து, கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவர்களுக்கு இரவு உணவு வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தோம். அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டு தீர்மானத்தின் படி, கலை மற்றும் இலக்கியப் போட்டிகள் நடத்தப்பட்டு அதில் வெற்றிப் பெற்ற 60 மாணவ, மாணவியருக்கு பரிசுகளையும் வழங்கினோம்.

மாற்றுத்திறனாளிகள் பழனி மலைக்கோயிலுக்கு கட்டணமில்லாமல் மின்இழுவை ரயில் (வின்ச்) மற்றும் கம்பிவட ஊர்தி (ரோப் கார்) செல்லவும், கட்டணமில்லாமல் தரிசனம் செய்திடும் வசதியினையும், சென்னை சில்க்ஸ் சார்பில் ரூ. 4 கோடி மதிப்பீட்டில் பழனி மலைக் கோயிலின் உற்சவர் சன்னதியில் வெள்ளித் தகடு பதிக்கும் பணியையும், திருக்கோயிலின் இராஜகோபுரம் மற்றும் மூலவர் விமானம் ஆகியவற்றை மின் ஒளிரூட்டும் பணிகளையும் தொடங்கி வைத்தோம். இந்த அரசு பொறுப்பேற்ற பின் திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்துகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு சொந்தமான சுமார் ரூ. 1,080 கோடி மதிப்பிலான சொத்துகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இன்று கோவை மாவட்டத்தில் திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ. 100 கோடி மதிப்பிலான சொத்துகளை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. ஒட்டுமொத்தமாக இதுவரை ரூ. 8,130.55 கோடி மதிப்பிலான 8,023 ஏக்கர் திருக்கோயில் சொத்துகள் ஆக்கிரப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்களை நவீன தொழில்நுட்ப வசதியுடன் கூடிய ரோவர் கருவிகளை கொண்டு அளவீடு செய்யும் பணிகளை 2022 ஆம் ஆண்டு மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயிலில் தொடங்கினோம். இதுவரை 2,23,695 ஏக்கர் நிலங்கள் அளவிடப்பட்டு, HRCE என்று பெயர் பொறிக்கப்பட்ட 1,47,603 எல்லைக் கற்களை நட்டு, எந்த திருக்கோயிலுக்கான சொத்து என்று அறிவிப்பு பலகைகளை வைத்து பாதுகாக்கப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத் துறையின் வரலாற்றில் எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்த ஆட்சியின் நான்கரை ஆண்டுகளில் உபயதாரர்கள் ரூ. 1,557.78 கோடி மதிப்பிலான திருப்பணிகளை செய்து தருகின்றனர். உபயதாரர்கள் வழங்குகின்ற நிதி முறையாக திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கும், அவர்களின் நேர்த்திக் கடனை நிறைவேற்றுகின்ற வகையில் செலவிடப்படுகின்றது என்பதனை முழுமையாக உணர்ந்து, அரசு மற்றும் துறையின் மீதான நம்பிக்கையோடு வழங்கியமைக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இந்நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பெ. செந்தில்குமார், . எஸ். காந்திராஜன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர். எஸ். சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள். கார்த்திக், திரு. செ. மாரிமுத்து, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் கே.எம். சுப்பிரமணியன் மற்றும் அறங்காவலர்கள், துணை ஆணையர் வெங்கடேசன் கலந்து கொண்டனர்.

# சென்னை மாநகராட்சியின் சார்பில், மெரினா நீலக்கொடி கடற்கரைப் பகுதியில் தமிழ்நாடு பாரம்பரிய கலை நிகழ்ச்சி: ஏராளமானோர் பார்த்து மகிழ்ந்தனர்



**சென்னை,டிச.09**

சென்னை மாநகராட்சிப் பகுதியில் உள்ள மெரினா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை உள்ளிட்ட அனைத்து கடற்கரைப் பகுதிகளில் மக்களின் வசதிக்காகவும், சிறந்த சுற்றுச் சூழலை ஏற்படுத்திடும் வகையிலும், பல்வேறு கட்டமைப்பு வசதிகளும், மேற்கொள்ளப்பட்டு தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மெரினா கடற்கரையில், மொரினசான்றுக்கான மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, இந்த நீலக்கொடி கடற்கரைப் பகுதிக்கு, மக்கள் பெருமளவில் வருகை தருகின்றனர். இந்நிலையில், இங்கு வரும் மக்களின் மகிழ்விற்காகவும், தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலைகளை மக்களிடம் கொண்டு செல்லும் வகையிலும், இந்த கலைகளை மக்களிடம் கொண்டு செல்லும் கலைஞர்களுக்கு ஆதரவளித்து அவர்களை ஊக்கப்படுத்திடும் வகையிலும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், மெரினாவில் உள்ள நீலக்கொடி கடற்கரைப் பகுதியில், தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நாட்டுப்புறக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் 21.09.2025, 05.10.2025, 12.10.2025, 02.11.2025, 09.11.2025, 16.11.2025 மற்றும் 23.11.2025 ஆகிய நாட்களில் சிறப்பாக நடைபெற்றது.

**கலை நிகழ்ச்சி**

இந்த கலை நிகழ்ச்சியினை ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர். அதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நாட்டுப்புறக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்த கலை நிகழ்ச்சியில், பத்மநாபன் கலைக்குழுவினரின் கரகாட்டமும் மற்றும் காவடியாட்டமும், பாலமுருகன் கலைக்குழுவினரின் பெரிய மேளமும், சுதாகர் கலைக்குழுவினரின் கைச்சிலம்பாட்டமும், ராஜ் கலைக்குழுவினரின் தப்பாட்டமும், ஆர்.கணேசன் கலைக்குழுவினரின் கிராமியப் பாடல்களும், விஜயகுமார் கலைக்குழுவினரின் துடும்பாட்டமும் உள்ளிட்ட கலை நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த கலை நிகழ்ச்சிகளில் 70க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்று சிறப்பாக கலை நிகழ்ச்சிகளை நடத்தினர்.

மாலை 5.30 மணி முதல் மூன்று மணி நேரம் மெரினா நீலக்கொடி கடற்கரைப் பகுதியில் நடைபெற்ற இந்த கலை நிகழ்ச்சியினை நேரடியாக ஆயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர். இந்த பாரம்பரியகலை நிகழ்ச்சிகள் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமையன்று பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் நடத்தப்படுகிறது.



ஜெயலலிதாவின் 9 ம் ஆண்டு நினைவு நாளையொட்டி விருகம்பாக்கம் தாங்கள் ஏரிக்கரை பகுதியில் இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் ஏ.ஆர்.இனியன் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் விருகை.வி.என்.ரவி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார்.உடன் பகுதி செயலாளர்கள்சி.கே.முருகன்,ஏ.எம்.காமராஜ், மாமன்ற உறுப்பினர்கதிர்முருகன், சுரேஷ் வி.என்.பன்னீர் செல்வம், ரிட்டாஅண்ணாமலை உட்பட பலர் கலந்து கொண்டனர்

# சைதாப்பேட்டை பகுதியில் வாலிபரை தாக்கி பணம் பறித்த வழக்கில் ஒருவர் கைது

சென்னை டிச 09-

சென்னை, சைதாப்பேட்டை, ஜோன்ஸ் ரோடு, மசூதி தோட்டத்தில் வசித்து வரும் முகமது இப்ராஹிம், ரகுமான் என்பவர் சைதாப்பேட்டை பகுதியில் டீ கடைகளுக்கு பிஸ்கட் மற்றும் தண்ணீர் கேன் சப்ளை செய்து வருகிறார். இவர் கடந்த 5 ந் தேதி அன்று இரவு வேலை முடித்து சைதாப்பேட்டை, அண்ணாசாலையில் உள்ள பெட்ரோல் பங்க்கில், இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போட சென்றபோது, அங்கு வந்த அறிமுகமான 4 பேர் மேற்படி முகமது இப்ராஹிமிடம் பணம் கேட்டு மிரட்டி கை மற்றும் கட்டையால் தாக்கி அவரிடமிருந்து ரூ.2,ஆயிரம் பறித்துக்கொண்டு தப்பிச்சென்றனர். காயமடைந்த முகமது இப்ராஹிம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று இது குறித்து சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர் .சைதாப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி பழனி, என்பவரை கைது செய்தனர். மேற்படி வழக்கில் தொடர்புடைய மற்ற 3 குற்றவாளிகளை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர்.

கைது செய்யப்பட்ட எதிரி பழனி விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

**கண், ரத்த தானம் செய்வீர்**

# மீன்பிடிதொழிலாளியிடம் வழிப்பறி: இருவர் கைது

**சென்னை டிச 09-**

சென்னை, காசிமேடு, ஜி.எம்.பேட்டையைச் சேர்ந்த சரவணன், என்பவர் மீன்பிடி தொழில் செய்து வருவதாகவும், சரவணன் நேற்று முன் தினம் காலை, வீட்டினருகே சிங்காலவேலன் நகர் சப்வே அருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு நின்றிருந்த தெரிந்த நபர்களான தீபத் மற்றும் சஞ்சய் ஆகியோர் சரவணனை வழிமறித்து பணம் கேட்டதாகவும், சரவணன் பணம் தர மறுக்கவே 2 பேரும் கையால் தாக்கி, கீழே கிடந்த பீர் பாட்டிலை உடைத்து சரவணனின் கழுத்தில் வைத்து மிரட்டி அவர் சட்டைப் பையில் வைத்திருந்த பணம் ரூ.300 ஐ பறித்துக் கொண்டு கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும், மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படியும், பாதிக்கப்பட்ட சரவணன் என்பவர் காசிமேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். காசிமேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.தீபத், 2.சஞ்சய், ஆகிய இருவரை கைது செய்தனர். விசாரணையில் எதிரி தீபத் காசிமேடு காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே 15 குற்ற வழக்குகளும், மற்றொரு எதிரி சஞ்சய் மீது 7 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# சட்டவிரோதமாக உடல் வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் கஞ்சா விற்பனை செய்த 5 பேர் கைது

**சென்னை டிச 09-**

சென்னை ஆர்.கே.நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர், நேற்று முன் தினம் காலை, கொருக்குப்பேட்டை, கண்ணகி நகர் பின்புறம் கண்காணிப்பு பணியில் இருந்த போது, அங்கு சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த 5 பேரை விசாரணை செய்து, அவர்களை சோதனை செய்த போது, அவர்கள் உடல்வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் கஞ்சா போதைப்பொருளை விற்பனைக்காக மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், ஆர்.கே.நகர் காவல் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, சட்டவிரோதமாக உடல்வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் கஞ்சா வைத்திருந்த எதிரிகள் 1.அருள்ராஜ், 2.சூர்யா, 3.கோபால், 4.அரவிந்தன், 5.சுவேதா, ஆகிய 5 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 600 எண்ணிக்கைகள் கொண்ட உடல்வலி நிவாரண மாத்திரைகள், 4 கிலோ கஞ்சா மற்றும் 3 செல்போன்கள் மற்றும் 2 இருசக்கர வாகனங்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி அருள் ராஜ் மீது ஏற்கனவே கஞ்சா உட்பட 3 குற்ற வழக்குகளும், எதிரி கோபால் மீது 1 கஞ்சா வழக்கும், எதிரி அரவிந்தன் மீது கஞ்சா, திருட்டு, வழிப்பறி உட்பட 8 குற்ற வழக்குகள் உள்ளதும், இவர் கொடுங்கையூர் காவல் நிலைய சரித்திரப்பதிவேடு குற்றவாளி என்பதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட 5 பேரை விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# எழும்பூர் பகுதியில் பெண் தூய்மை பணியாளர் மீது தாக்குதல்: ஒருவர் கைது

**சென்னை டிச 09-**

சென்னை, கொருக்குப்பேட்டையைச் சேர்ந்த லட்சுமி, என்பவர், பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியாளராக வேலைக்கு சேர்ந்து வேப்பேரி பகுதியில் பணி செய்து வருவதாகவும், நேற்று முன் தினம்விடியற்காலை லட்சுமி, எழும்பூர், காந்தி இர்வின் பாலம் மற்றும் ஈ.வெ.ரா சாலை சந்திப்பு அருகே நடைபாதையில் துப்புரவு பணி மேற்கொண்டிருந்தபோது, அங்கு நடந்து சென்ற ஒரு நபரை ஓரமாக போக சொன்னதாகவும், அதற்கு அந்த நபர் இந்தியில் தகாத வார்த்தைகளால் பேசி, லட்சுமியை தாக்கிவிட்டு, கழுத்தை அறுத்துவிடுவதாக செய்கை செய்தபோது, லட்சுமி சத்தம் போடவே, அந்த நபர் தப்பியோடிவிட்டதாகவும், மேற்படி நபர் மீது நடவடிக்கை எடுக்கும்படியும், லட்சுமி என்பவர் எழும்பூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் ஆகிய சட்டப்பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். எழும்பூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டு தப்பிச் சென்ற எதிரி 1.ரவீந்திர் சிங், என்பவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரி ரவீந்தர் சிங் விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# டிபன் கடைக்காரரை கத்தியை காட்டி மிரட்டி, பணம் மற்றும் செல்போன் பறிப்பு: இருவர் கைது

**சென்னை டிச 09-**

சென்னை, வில்லிவாக்கம் பகுதியில் குடும்பத்துடன் வசித்து வரும் விஜய், என்பவர் இராஜமங்கலம் மெயின் ரோடு, கால்நடை மருத்துவமனை அருகே தள்ளுவண்டியில் டீ மற்றும் டிபன் கடை நடத்தி வருகிறார்.

இவர் கடந்த 4 ந் தேதி அன்று இரவு கடையில் வியாபாரம் முடித்து வீட்டிற்கு கிளம்பும் போது அவரது கடைக்கு வந்த தெரிந்த நபர்களான ஜெயக்குமார் மற்றும் பாஸ்கர் ஆகியோர் விஜயிடம் பணம் கொடு என மிரட்டினர்,

அதற்கு விஜய் தன்னிடம் பணம் இல்லை என கூறிய போது,2 பேரும் விஜயை கையால் தாக்கி, அதில் ஒருவர் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி மிரட்டி கல்லாப்பெட்டியில் வைத்திருந்த பணம் ரூ.1,300 ஐ மற்றும் அருகிலிருந்த அவரது செல்போனை எடுத்து கொண்டு கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றனர்.

இது குறித்து விஜய், இராஜமங்கலம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

இராஜமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 1.ஜெயக்குமார், 2.பாஸ்கர், ஆகிய இருவரை கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து குற்றச்செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரிகள் ஜெயக்குமார் மற்றும் பாஸ்கர் ஆகியோர் இராஜமங்கலம் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளிகள் என்பதும், ஜெயக்குமார் மீது ஏற்கனவே கொலைமுயற்சி, திருட்டு உள்ளிட்ட 8 குற்ற வழக்குகளும், பாஸ்கர் மீது கொலைமுயற்சி உள்பட் 2 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# ஐஸ்அவுஸ் பகுதியில் உடல் வலி நிவாரண மாத்திரைகள் விற்றவர் கைது

**சென்னை டிச 09-**

சென்னை ஐஸ்அவுஸ் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர், கடந்த 7 ந் தேதி காலை ஐஸ் அவுஸ், ராம்நகர் 8வது தெருவிலுள்ள பொதுக்கழிப்பிடம் அருகே கண்காணித்து, அங்கு சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த ஒரு நபரை விசாரணை செய்து, அவரை சோதனை செய்தபோது, அவர் உடல்வலி நிவாரண மாத்திரைகளை சட்டவிரோத விற்பனைக்காக மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.அதன்பேரில், ஐஸ்அவுஸ் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, சட்டவிரோதமாக உடல்வலி நிவாரண மாத்திரைகள் வைத்திருந்த எதிரி அபிஷேக், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 40 எண்ணிக்கைகள் கொண்ட உடல்வலி நிவாரண மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டது.



செங்கம் மேற்கு ஒன்றிய அதிமுக சார்பில் நடந்த அம்பேத்கார் நினைவு நாள் நிகழ்ச்சிக்கு செங்கம் மேற்கு ஒன்றிய அதிமுக செயலாளரும் நகர மன்ற உறுப்பினருமான மகரிஷி மனோகரன் தலைமை தாங்கினார். திருவண்ணாமலை தெற்கு மாவட்ட செயலாளரும் போளூர் தொகுதி எம்எல்ஏவுமான அக்ரி கிருஷ்ணமூர்த்தி அம்பேத்கார் சிலைகளுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.



திருப்பத்தூர் வேளாண்மை உற்பத்தியாளற்கள் விற்பனை கூடத்தில் வைக்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களின் சரிபார்ப்பு பணி அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் கலெக்டர் சிவசவுந்திரவல்லி தலைமையில் நடந்தது. இதில் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கோவிந்தராசு,மாவட்டவழங்கல்அலுவலர்முருகேசன்கலந்துகொண்டனர்.

## புதுப்பாளையத்தில் புதிய பாரத எழுத்தறிவு திட்ட தேர்வு



**செங்கம் டிச.09**

செங்கம் தாலுக்கா புதுப்பாளையம் ஒன்றியத்தில் புதிய பாரத எழுத்தறிவு திட்டம் 131 மையங்களில் நடைபெற்று வருகிறது. இதில் 3301 கற்போருக்கு மாநில அளவிலான அடிப்படை எழுத்தறிவு தேர்வு வருகிற 14-ஆம் தேதி நடைபெற உள்ளது. அதற்கான தன்னார்வலர்களுக்கு உரிய வழிகாட்டல் பயிற்சி வட்டார வளமையத்தில் நடைபெற்றது. பயிற்சியினை வட்டார மேற்பார்வையாளர் சின்னராஜ் தொடக்கி வைத்து, தேர்வுக்கு உரிய ஆயத்த பணிகளை விளக்கி பேசினார். வட்டார கல்வி அலுவலர் ஆறுமுகம் பயிற்சியை பார்வையிட்டு, தன்னார்வலர்களுக்கு பரிசுகள் வழங்கி, பாராட்டி பேசினார். எழுத்தறிவு திட்ட ஒருங்கிணைப்பாளர் இந்துமதி, ஆசிரியர் பயிற்றுனர் அரிகிருஷ்ணன், சிறப்பு பயிற்றுனர் நெடுஞ்செழியன், தலைமை ஆசிரியர் டேவிட் ஜான்சன், செல்வகுமார், வட்டார கணக்காளர் சிவா, தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்

## எடப்பாடி பழனிச்சாமியை முதல்வராக்க மக்கள் முடிவு செய்துவிட்டனர்:போளூரில் நயினார் நாகேந்திரன் பேச்சு

**திருவண்ணாமலை, டிச.9-**


தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம் என்ற பெயரில் பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். இதனைத் தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்டத்தில் 27 தொகுதியாக போளூர் தொகுதி போளூர் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டுசிறப்புரையாற்றினார்.

இந்தநிகழ்ச்சிக்கு பாஜக தி.மலை வடக்கு மாவட்ட தலைவர் கவிதா வெங்கடேசன் தலைமை தாங்கினார். அதிமுக முன்னாள் அமைச்சர்கள் அக்ரி எஸ்.எஸ்.கிறிஷ்ணமூர்த்தி எம்எல்ஏ சேவூர் எஸ்.ராமச்சந்திரன் எம்எல்ஏ அதிமுக மத்திய மாவட்ட செயலாளர் ஜெயசுதா பாஜக மாநில பொதுச் செயலாளர் கார்த்தியாயினி ஆகியோர் முன்னிலை வகிக்க பாஜக தேசிய பொதுக்குழு உறுப்பினர் டி.ஏழுமலை அனைவரையும் வரவேற்றார்.

தொடர்ந்து இந்த கூட்டத்தில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பேசுகையில் வரும் சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியில் யார் நின்றாலும் போளூர் தொகுதியில் அவர்கள்தான் வெற்றிபெறுவார்கள். இந்த கூட்டணி மக்கள் துணை கொண்டு திமுக ஆட்சியை விரட்டியடிக்கும் மத்திய அரசு ஏராளமான திட்டத்தை தமிழக அரசுக்கு தொடர்ந்துகொடுத்துக்கொண்டே வருகிறது. ஆனால் எவ்வளவு கொடுத்தாலும் எதுவும் தரவில்லை என தமிழ்நாடு முதலமைச்சர் குற்றம் சாட்டிவருகிறார்.

திமுக ஆட்சியில் 17 அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டு உள்ளது. ஆனால் 3வது முறையாக பிரதமராக பதிவயேற்றுள்ள பிரதமர் மோடி மீதும் அவர் அமைச்சரவை மீதும் ஏதாவது ஊழல் குற்றச்சாட்டு சொல்லமுடியுமா இதுவரை ஆட்சி ஆண்டதுபோதும் மக்கள் மாண்டதுபோதும் என தமிழக மக்கள் முடிவு செய்துவிட்டனர். வரும் சட்டமன்ற தேர்தலில் பாஜக கூட்டணியில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமியை முதல்வராக்க மக்கள் முடிவு செய்துவிட்டனர்.

நீதிமன்ற உத்தரவு போட்டும் திமுக அரசு திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றாமல் பல தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர். ஆன்மீகத்திற்கு எதிரான இந்த ஆட்சி இனியும் இருக்கக்கூடாது திமுக கட்சியின் இந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவது பாஜகவின் நோக்கமாக உள்ளது. அதற்கு மக்கள் அனைவரும் உறுதுணையாக விளங்க வேண்டும் என்றார்.



செங்கத்தில் திமுக சார்பில் நடந்த அம்பேத்கார் நினைவு நாள் நிகழ்ச்சிக்கு நகர திமுக செயலாளர் அன்பழகன் தலைமை தாங்கினார். நகரமன்ற தலைவர் சாதிக்பாஷா, முன்னாள் பேரூராட்சி தலைவர் சென்னம்மாள் முருகன் முன்னிலை வகித்தனர். மு.பெ.கிரி எம்எல்ஏ அம்பேத்கார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் கோளாப்பாடி செந்தில், பிஞ்சூர் ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் குப்பனத்தம் பிரபாகரன் கலந்து கொண்டனர்



விசிகயின் அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதி மண்டல செயலாளராக வழக்கறிஞர் என்.தமிழ்மாறன் நியமனம் செய்யப்பட்டார். அவரை அரக்கோணம் ஒன்றிய செயலாளர் பாக்யராஜ் மற்றும் ஒன்றிய குழு உறுப்பினர் ஆஷா பாக்யராஜ் வாழ்த்திய போது எடுத்த படம்



ராணிப்பேட்டை மாவட்ட மக்கள் குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் சந்திரகலா பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று நடவடிக்கை எடுக்கஅதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். உடன் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் வசந்தகுமார் உள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில்

## குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் பொதுமக்களிடமிருந்து 474 கோரிக்கை மனுக்களை பெற்றார்

**விழுப்புரம், டிச.09-**

விழுப்புரம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக் க ளி டம் கோரிக்கை மனுக்கள் பெற்று மனுதாரர்கள் முன்னிலையில் விசாரணை மேற்கொண்டு மனுக்கள் மீது உடனடி தீர்வு காண வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சுமார் 474 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.

அதில் முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, வீட்டுமனைபட்டா கோருதல், ஆதரவற்றோர் உதவித்தொகை, பட்டாமாறுதல், தொழில் தொடங்க கடனுதவி கோருதல், கலைஞரின் கனவு இல்லம் திட்டம், பிரதம மந்திரி வீடுகட்டும் திட்டம், உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை நேரடியாக பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அறிவுறுத்தப்பட்டது.

முன்னதாக, மாற்றுதிறனாளிகளிடம் பல்வேறு கோரிக்கை மனுக்கள் நேரடியாக பெற்றுகொள்ளப்பட்டது.அ த னை தொ டர்ந்து விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் தையூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சத்துணவு அமைப்பாளர் சிவகங்கை பணி காலத்தில் காலமானதால், அவரின் குடும்ப வாரிசுதாரரான வி.ஜெயசங்கரி க/பெ ராஜேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் சத்துணவு அமைப்பாளர் பணி நியமன ஆணையினை கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், வழங்கினார்.

இக் கூட் டத் தில், மாவட்ட வருவாய் அலுவலர் கி.அரிதாஸ், மாவட்ட உதவி ஆட்சியர் (பயிற்சி) ரா.வெங் க டேஷ் வ ரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) யோகஜோதி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ஜெ.முகுந்தன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் அலுவலர் தமிழரசன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் வளர்மதி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



மழைநீர் உயிர்நீர்

## கிறிஸ்துமஸ் விழா

குற்றாலம் டிச.09:

தென்காசி மாவட்டம் பழைய குற்றாலம் ஹில்டன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது.விழாவில் சிறப்பு விருந்தினர்களாக Rev. சார்லஸ், சகாயமேரி சார்லஸ், ஹில்டன் பள்ளியின் தாளாளர் ஆர்.ஜெ.வி.பெல்;, பள்ளியின் செயலாளர் கிரேஸ் கஸ்தூரி பெல,; பள்ளியின் முதல்வர் மான்சி கே மத்தாய், தலைமையாசிரியர், ஆசிரியர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.இறைவணக்கத்துடன் தொடங்கப்பட்ட விழாவில் பள்ளியின் மாணவத் தலைவி ஜேன் கிறிஸிடா வரவேற்புரை வழங்கினார். பள்ளியின் தாளாளர் விருந்தினரை அறிமுகம் செய்து வைக்க சிறப்பு விருந்தினர் Rev. சார்லஸ் மாணவர்களுக்கு கிறிஸ்துவின் பிறப்பு குறித்து செய்தியை வழங்கினார். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் கண்ணிற்கு விருந்தாய் அமைந்;தது.



அரக்கோணத்தில் வழக்கறிஞர்களின் பணிக்கு எதிரான இ பைலிங் முறையை ரத்து செய்ய கோரி வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் பார் அசோசியேஷன் தலைவர் வீரராகவன் தலைமையில் செயலாளர் என்.தமிழ்மாறன் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிர்வாகிகள் சீதாராமன், தமின் அன்சாரி, மதன் கலந்து கொண்டனர்

## திருப்பத்தூர் மாவட்டம்,நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியத்தில் திமுக பாக இளைஞரணி அமைப்பாளர்கள் கூட்டம்



**திருப்பத்தூர், டிசம்பர்; 09**

நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம், நாட்றம்பள்ளி பேரூர் கிளைக்கழகம் மற்றும் பாக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் ஆலோசனை கூட்டத்தில்திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

**கலந்து கொண்டோர்**

நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய செயலாளர்,திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார் அவர்கள் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்இந்நிகழ்ச்சியில்நாட்றம்பள்ளி பேரூர் செயலாளர் எஸ்.உமாசந்திரன்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல்,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மு.க.அருள்நிதி,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சுரேஷ், பேரூர் இளைஞரணி அமைப்பாளர் கீர்த்திராஜன்,ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் கணேசன், சரஸ்வதி, பரிதிமணி, சக்கரவர்த்தி, பால்ராஜ், சரவணன், திருகுமரன் ஜவகர், மகேந்திரன், புருஷோத்தமன், சிவக்குமார் மாதவன், ஆனந்தன், செந்தில்குமார், அசோக்குமார், அண்ணாமலை, செல்வராஜ், நாகராஜ் மற்றும் கிளைக்கழக, பாக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

மாண்புறு கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,ஆரணி
I.A.NO:3/2024 in O.S.NO:229/2023
I.A.NO:6/2025 in I.A.NO:3/2024 in O.S.NO:229/2023
I.A.NO:8/2025 in I.A.NO:3/2024 in O.S.NO:229/2023
I.A.NO:10/2025 in I.A.NO:3/2024 in O.S.NO:229/2023
I.A.NO:12/2025 in I.A.NO:3/2024 in O.S.NO:229/2023
I.A.NO:4/2025 in I.A.NO:2/2023 in O.S.NO:229/2023
தேவபாலன் மற்றும் 3 நபர்கள் ....மனுதாரர்கள்/வாதிகள்
-எதிர்-
முனுசாமி நாயுடு மற்றும் 45 நபர்கள் ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
R5) தஸ்தகீர் ஷெரிப் த/பெ.யேசியா ஷெரிப்
க.எண்.30/2, பாரதியார் தெரு, கொசப்பாளையம், ஆரணி டவுன்& வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம் ....5-ம் எதிர்மனுதாரர்/5-ம் பிரதிவாதி
அறிவிப்பு
மேற்படி மனுவின் மனுதாரர்கள் தங்களுக்கு எதிராக மேற்படி I.A NO: 3/2024 in O.S.NO:229/2023, I.A.NO:6/2025 in I.A.NO:3/2024 in O.S.NO: 229/2023, I.A.NO:8/2025 in I.A.NO:3/2024 in O.S.NO:229/2023, I.A.NO: 10/2025 in I.A.NO:3/2024 in O.S.NO:229/2023, I.A.NO:12/2025 in I.A.NO: 3/2024 in O.S.NO:229/2023, I.A.NO:4/2024 in I.A.NO:2/2023 in O.S.NO: 229/2023 என்ற மனுக்களை மேற்படி மாண்புறு ஆரணி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தற்போது வரை நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி மனுக்களின் 5-ம் எதிர்மனுதாரர் ஆகிய தாங்கள் மேற்படி வழக்கில் மேற்படி நீதிமன்றத்தில் வருகின்ற 12.12.2025-ம் தேதி காலை 10.30 மணிக்கு ஆஜராக வேண்டி வாய்தா போடப்பட்டுள்ளது. தவறும்பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலை சார்பாக உத்தரவு பிராப்பிக்கப்படும் என்பதை அறியவும்.
G.A.தியாகராஜன் B.A.,B.L., V.அறிவழகன் B.A.,B.L.,
வழக்கறிஞர்கள், ஆரணி

மாண்புறு கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,ஆரணி
I.A.NO:3/2024 in O.S.NO:229/2023
I.A.NO:6/2025 in I.A.NO:3/2024 in O.S.NO:229/2023
I.A.NO:8/2025 in I.A.NO:3/2024 in O.S.NO:229/2023
I.A.NO:10/2025 in I.A.NO:3/2024 in O.S.NO:229/2023
I.A.NO:12/2025 in I.A.NO:3/2024 in O.S.NO:229/2023
I.A.NO:4/2024 in I.A.NO:2/2023 in O.S.NO:229/2023
தேவபாலன் மற்றும் 3 நபர்கள் ....மனுதாரர்கள்/வாதிகள்
-எதிர்-
முனுசாமி நாயுடு மற்றும் 45 நபர்கள் ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
R45) நகர ஊரமைப்பு உதவி இயக்குனர்,
ஆரணி ஊராட்சி ஒன்றியம், சேத்பட் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம் ....45-ம் எதிர்மனுதாரர்/45-ம் பிரதிவாதி
அறிவிப்பு
மேற்படி மனுவின் மனுதாரர்கள் தங்களுக்கு எதிராக மேற்படி I.A NO: 3/2024 in O.S.NO:229/2023, I.A.NO:6/2025 in I.A.NO:3/2024 in O.S.NO: 229/2023, I.A.NO:8/2025 in I.A.NO:3/2024 in O.S.NO:229/2023, I.A.NO: 10/2025 in I.A.NO:3/2024 in O.S.NO:229/2023, I.A.NO:12/2025 in I.A.NO: 3/2024 in O.S.NO:229/2023, I.A.NO:4/2024 in I.A.NO:2/2023 in O.S.NO: 229/2023 என்ற மனுக்களை மேற்படி மாண்புறு ஆரணி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தற்போது வரை நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி மனுக்களின் 45-ம் எதிர்மனுதாரர் ஆகிய தாங்கள் மேற்படி வழக்கில் மேற்படி நீதிமன்றத்தில் வருகின்ற 12.12.2025-ம் தேதி காலை 10.30 மணிக்கு ஆஜராக வேண்டி வாய்தா போடப்பட்டுள்ளது. தவறும்பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலை சார்பாக உத்தரவு பிராப்பிக்கப்படும் என்பதை அறியவும்.
G.A.தியாகராஜன் B.A.,B.L., V.அறிவழகன் B.A.,B.L.,
வழக்கறிஞர்கள், ஆரணி

மாண்புமிகு கோட்டாட்சியர் அவர்கள் அரக்கோணம்.
அதிமுசி 1/888 /2025
ஆதித்யா த/பெ அர்ஜுனன்
No - 438 பிள்ளையார் கோயில் தெரு, பரித்தி புத்தூர் கிராமம், அரக்கோணம் வட்டம் ராணிபேட்டை மாவட்டம்
--மனுதாரர்
திருமிகு. வருவாய் கோட்டாச்சியர் அவர்கள், அரக்கோணம்.
--எதிர்மனுதாரர்
மேலேகண்ட முகவரியில் வசிக்கும் ஆதித்யா ஆகிய நான் எனது பாட்டனார் சின்னப்ப முதலி த/பெ ராமசாமி முதலி இவர் கடந்த 06-11-1931ல் மேலே கண்ட கிராமத்தில் இறந்தார். இவரது இறப்பு எங்கள் கவனக்குறைவால் எதிர் மனுதாரிடம் பதிவு செய்ய தவறி விட்டோம். எனவே, பாட்டனார் இறப்பு பதிவு செய்யும்படி கோரி உள்ளேன். எனவே இது குறித்து ஆட்சே பனை உள்ளவர்கள் நேரில் ஆஜ ராகி ஆட்சேபனை தெரிவிக்க லாம் தவறினால் ஒருதலைப்பட்ச மாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பெறப்படும் என அறியவும்.
இப்படிக்கு
ஆதித்யா

மாண்புமிகு கோட்டாட்சியர் அவர்கள் அரக்கோணம்.
அதிமுசி 1/886 /2025
சடகோபன் த/பெ கந்தசாமி
No - 12/56 புதிய அண்ணா நகர், சித்தேரி கிராமம் & அஞ்சலி அரக்கோணம் வட்டம் ராணிபேட்டை மாவட்டம்
--மனுதாரர்
திருமிகு. வருவாய் கோட்டாச்சியர் அவர்கள், அரக்கோணம்.
--எதிர்மனுதாரர்
மேலேகண்ட முகவரியில் வசிக்கும் சடகோபன் ஆகிய நான் எனது தந்தை கந்தசாமி த/பெ ரத்தின ரெட்டி இவர் கடந்த 04-03- 2000ல் மேலே கண்ட கிராமத்தில் இறந்தார். இவரது இறப்பு எங்கள் கவனக்குறைவால் எதிர் மனுதாரிடம் பதிவு செய்ய தவறி விட்டோம். எனவே, தந்தை இறப்பு பதிவு செய்யும்படி கோரி உள்ளேன். எனவே இது குறித்து ஆட்சே பனை உள்ளவர்கள் நேரில் ஆஜ ராகி ஆட்சேபனை தெரிவிக்க லாம் தவறினால் ஒருதலைப்பட்ச மாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பெறப்படும் என அறியவும்.
இப்படிக்கு
சடகோபன்

வட்டாட்சியர் அவர்கள்
திருப்பத்தூர்
ந.க.ஆ4/5188/2025
நாள்: 13.10.2025
சுரேஷ்
த/பெ.நடுதம்பி,
வக்கணம்பட்டி கிராமம்,
திருப்பத்தூர் வட்டம்,
திருப்பத்தூர் மாவட்டம் ........ மனுதாரர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர். ........ எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய **எனது தாத்தா திரு.திருப்பதி** த/பெ.தேவன் என்பவர் கடந்த 20.10.1972-ம் தேதியில் திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், வக்கணம்பட்டி கிராமத்தில் இறந்தார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
//உத்தரவுப்படி//
மனுதாரர்
சுரேஷ்
த/பெ.நடுதம்பி,
வக்கணம்பட்டி கிராமம்,
திருப்பத்தூர் வட்டம்,
திருப்பத்தூர் மாவட்டம்

வட்டாட்சியர் அவர்கள்
திருப்பத்தூர்
ந.க.ஆ4/6173/2025
நாள்: 21.11.2025
ஜெயபாலன்
த/பெ.சின்னபையன்,
மட்றப்பள்ளி கிராமம்,
திருப்பத்தூர் வட்டம்,
திருப்பத்தூர் மாவட்டம் ........ மனுதாரர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர். ........ எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய **எனது தாயார் திருமதி.உண்ணாமலை** க/பெ.சின்னபையன் என்பவர் கடந்த 20.11.2011-ம் தேதியில் திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மட்றப்பள்ளி கிராமத்தில் இறந்தார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
//உத்தரவுப்படி//
மனுதாரர்
ஜெயபாலன்
த/பெ.சின்னபையன்,
மட்றப்பள்ளி கிராமம்,
திருப்பத்தூர் வட்டம்,
திருப்பத்தூர் மாவட்டம்

## முதல் டி-20 போட்டி:
# இந்தியா – தென் ஆப்பிரிக்கா இன்று கட்டாக்கில் மோதல்




**கட்டாக், டிச. 09-**

இந்தியா- தென்ஆப்பிரிக்கா இடையே 5 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடர் நடத்தப்படுகிறது. இதன் முதலாவது ஆட்டம் கட்டாக்கில் இன்று நடக்கிறது.

**தொடரை வென்றது...**

விசாகப்பட்டினத்தில் தென்ஆப்பிரிக்காவுக்கு எதிரான கடைசி ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 271 ரன் இலக்கை இந்திய அணி 39.5 ஓவர்களிலேயே எட்டிப்பிடித்து 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஜெய்ஸ்வால் சதமும் (116 ரன்), ரோகித் சர்மா (75 ரன்), விராட் கோலி (65 ரன்) அரைசதமும் விளாசினர். வெற்றியின் மூலம் தொடரை இந்தியா 2-1 என்ற கணக்கில் சொந்தமாக்கியது.

**தனி பயிற்சியாளர்....**

இதனையடுத்து இந்தியா- தென்ஆப்பிரிக்கா இடையே 5 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடர் நடத்தப்படுகிறது. இதன் முதலாவது ஆட்டம் கட்டாக்கில் இன்று நடக்கிறது. இந்நிலையில் இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- கிரிக்கெட்டுடன் எந்த தொடர்பும் இல்லாதவர்கள் சில விஷயங்களை பற்றி சொன்னார்கள். ஐ.பி.எல். அணியின் உரிமையாளர் ஒருவர் (டெல்லி அணியின் உரிமையாளர் பார்த் ஜின்டால்) இந்திய டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு தனி பயிற்சியாளர் தேவை என்று கூறியுள்ளார்.

**ஆச்சரியமாக உள்ளது...**

கிரிக்கெட்டுக்கு சம்பந்தமே இல்லாத நபர் இவ்வாறு சொன்னது ஆச்சரியமாக உள்ளது. ஒவ்வொருவரும் தங்களது வரம்புக்குள் இருப்பது முக்கியம். நாங்கள் மற்றவர்களின் விஷயத்தில் தலையிடுவது கிடையாது. எனவே, நாங்கள் என்ன செய்தாலும் அதில் தலையிட அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. இவ்வாறு கம்பீர் கூறினார்.

### அணியில் ஹர்திக், கில்

இன்று தொடங்கும் முதல்வ டி20 போட்டியில் காயம் காரணமாக டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடாத இந்திய அணியின் துணை கேப்டன் சுப்மன் கில், விளையாடுவார் என பி.சி.சி.ஐ. தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் காயம் காரணமாக இந்திய அணியில் இடம் பிடிக்காமல் இருந்த ஆல் ரவுண்டர் ஹர்திக் பாண்ட்யாவும் ஆடுமு லெவனில் களமிறங்குவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று தொடங்கும் டி-20 தொடருக்கு
# ஹார்திக், சுப்மன் கில் தயார்: கேப்டன் சூர்யகுமார் யாதவ்

**மும்பை, டிச. 09-**

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான டி20 தொடரில் விளையாடுவதற்கு ஹார்திக் பாண்டியா மற்றும் சுப்மன் கில் தயாராக இருப்பதாக இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவ் தெரிவித்துள்ளார்.

**சுற்றுப்பயணம்....**

தென்னாப்பிரிக்க அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட், ஒரு நாள் மற்றும் டி20 தொடர்களில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர் நிறைவடைந்துவிட்ட நிலையில், இன்று முதல் டி20 தொடர் தொடங்குகிறது. ஆசிய கோப்பைத் தொடரின்போது காயம் ஏற்பட்டதால் இந்திய அணியில் நீண்ட நாள்களாக இடம்பெறாமலிருந்து ஹார்திக் பாண்டியா மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார். கழுத்து வலியின் காரணமாக இரண்டாவது டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரிலிருந்து விலகிய சுப்மன் கில்லும் மீண்டும் அணியுடன் இணைந்துள்ளார்.

**உடல்தகுதியுடன்..**

இந்த நிலையில், தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான டி20 தொடரில் விளையாடுவதற்கு ஹார்திக் பாண்டியா மற்றும் சுப்மன் கில் தயாராக இருப்பதாக இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் பேசியதாவது: ஹார்திக் பாண்டியா மற்றும் சுப்மன் கில் இருவரும் தற்போது முழு உடல்தகுதியுடன் இருக்கிறார்கள். தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான டி20 தொடருக்கான இந்திய அணியில் அவர்கள் இடம்பெற்றுள்ளார்கள்.

**பிளேயிங் லெவனில்...**

ஹார்திக் பாண்டியா புதிய பந்தில் பந்து வீச்சில் ஈடுபடும்போது, இந்திய அணிக்கு நிறைய தெரிவுகள் கிடைத்ததை நீங்கள் ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் பார்த்திருப்பீர்கள். அவர் புதிய பந்தில் பந்துவீசும் போது, பிளேயிங் லெவனை தேர்வு செய்ய அணி நிர்வாகத்துக்கு பெரிய அளவில் சிரமம் இருப்பதில்லை. பிளேயிங் லெவனில் ஹார்திக் பாண்டியாக இருப்பது அணிக்கு சமபலத்தை கொடுக்கிறது. ஐ.சி.சி. உள்பட அனைத்து பெரிய தொடர்களிலும் ஹார்திக் பாண்டியாவின் அனுபவம் அணிக்கு மிகுந்த உதவியாக இருக்கிறது. மிகப் பெரிய போட்டிகளில் ஹார்திக் பாண்டியா சிறப்பாக செயல்பட்டுள்ளார். அவரது அனுபவம் அணிக்கு கண்டிப்பாக உதவியாக இருக்கும் என்றார்.

## 100 சதங்களை அடிப்பார்:
# கோலி மீது கவாஸ்கர் நம்பிக்கை

**மும்பை, டிச. 09-**

கோலியால் 100 சதங்கள் ஏன் அடிக்க முடியாது? என்று கேள்வி எழுப்பியுள்ள சுனில் கவாஸ்கர், அவர் இன்னும் 3 ஆண்டுகள் விளையாடினால் கூட 16 சதங்கள் தான் தேவை. தற்போது அவர் சிறப்பான பேட்டிங் செய்து வருகிறார் என்று தெரிவித்துள்ளார்.

**84 சதங்கள்...**

தென்ஆப்பிரிக்காக்கு எதிரான ஒரு நாள் தொடரில் இந்திய வீரர் விராட்கோலி இரண்டு சதங்கள் விளாசினார். ஒட்டுமொத்த சர்வதேச கிரிக்கெட்டில் அவர் இது வரை 84 சதங்கள் (ஒரு நாள் போட்டியில் 53, டெஸ்டில் 30 மற்றும் 20 ஓவர் போட்டியில் ஒரு சதம்) அடித்துள்ளார். இந்த வகையில் சச்சின் டெண்டுல்கருக்கு (100 சதம்) அடுத்த இடத்தில் இருக்கிறார்.

**ஏன் முடியாது?**

இந்த நிலையில் டெண்டுல்கரின் சாதனையை கோலி சமன் செய்வார் என இந்திய முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார். கவாஸ்கர் கூறும் போது, 'கோலியால் 100 சதங்கள் ஏன் அடிக்க முடியாது? அவர் இன்னும் 3 ஆண்டுகள் விளையாடினால் கூட 16 சதங்கள் தான் தேவை. தற்போது அவர் சிறப்பான பேட்டிங் செய்து வருகிறார்.

**100 சதங்களை...**

தென்ஆப்பிரிக்காவுக்கு எதிரான தொடரில் 2 சதம் எடுத்தார். அடுத்து வரும் நியூசிலாந்துக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இரு சதம் அடித்தால் சதங்களின் எண்ணிக்கை 86-ஐ தொடும். அதன் பிறகு அவர் நிச்சயம் 100 சதங்களை எட்டுவதற்கு நல்ல வாய்ப்புள்ளது. தென்ஆப்பிரிக்காவுக்கு எதிரான கடைசி ஒரு நாள் போட்டியில் தொடக்க ஆட்டக்காரர்கள் வலுவான அடித்தளம் அமைத்ததால் இந்தியாவின் வெற்றி உறுதி என்பதை உணர்ந்த கோலி தனக்கு தாமே மகிழ்ச்சியுடன் அதிரடியாக விளையாடினார். ஒருநாள் கிரிக்கெட்டில் கோலி இப்படி 20 ஓவர் போட்டி அவதாரம் எடுப்பதை பார்ப்பது அரிது' என்றார்.

**40 ஆட்டங்கள்...**

மற்றொரு முன்னாள் வீரர் ஆகாஷ் சோப்ரா கூறுகையில், 'தென்ஆப்பிரிக்காவுக்கு எதிரான ஆட்டங்களில் அடுத்தடுத்து 100 ரன்களுக்கு மேல் எடுத்தார். அவர் சதங்களின் சக்ரவர்த்தி. சூப்பர் பார்மில் உள்ளார். 2027-ம் ஆண்டு உலகக் கோப்பை உள்பட சுமார் 40 ஆட்டங்கள் மீதமுள்ளன. அதனால் அவரால் 100 சதங்கள் எட்ட முடியும்' என்றார். டெஸ்ட் மற்றும் சர்வதேச 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட 37 வயதான கோலி தற்போது ஒரு நாள் போட்டிகளில் மட்டுமே விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது.

## வரும் 11-ம் தேதி
# தே.ஜ. கூட்டணி எம்.பி.க்களுக்கு விருந்தளிக்கிறார் பிரதமர் மோடி

**புதுடெல்லி, டிச. 09-**

ஒருங்கிணைப்பை வலுப்படுத்தவும், பாராளுமன்ற அவை வியூகத்தை நெறிப்படுத்தவும் வரும் 11-ம் தேதி தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்.பி.க்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்து அளிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இது தொடர்பாக பேசிய பா.ஜ.க. மூத்த தலைவர் ஒருவர், "கூட்டணி கட்சிகளிடையே வெளிப்படையான மற்றும் ஆக்கப்பூர்வமான கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்காக இந்த கூட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. சட்ட முன்னுரிமைகள், இந்த கூட்டத் தொடருக்கான அரசாங்கத்தின் பரந்த நிகழ்ச்சி நிரல்கள், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஒருங்கிணைந்த எதிர்கால திட்டங்கள் ஆகியவை குறித்து இந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசுவார்.

கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளின் மூத்த அமைச்சர்கள், கட்சியின் மக்களவை மற்றும் மாநிலங்களவைக் குழு தலைவர்கள், எம்.பி.க்கள் இந்த உரையாடலில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.மேற்கு வங்கம், தமிழ்நாடு, அசாம் ஆகிய மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் வர உள்ள நிலையில், அதற்கான உத்திகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படும். தேர்தல்களுக்கு முன்னதாக கூட்டணி கட்சிகள் தங்கள் அணுகுமுறைகளை மேம்படுத்திக் கொள்ளும்.

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்னதாக அங்கு கட்சி (பா.ஜ.க.) தனது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. வரும் 20-ம் தேதி பிரதமர் மோடி மேற்கு வங்கம் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. நாடியா மாவட்டத்தில் ஒரு முக்கிய பொதுக் கூட்டத்தில் அவர் உரையாற்றுவார்.

அடுத்த ஆண்டு ஜனவரியில், மேற்கு வங்கம் முழுவதும் நான்கு முதல் ஆறு யாத்திரைகளை நடத்த கட்சி தயாராகி வருகிறது. இது குறித்தும் பிரதமர் மோடி தே.ஜ.கூ கூட்டத்தில் உரையாற்றுவார். சத்தீஸ்கர், குஜராத், கேரளா, மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் தற்போது நடத்தப்பட்டு வரும் இரண்டாம் கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்தும் மதிப்பீடு செய்யப்படும் என தெரிவித்தார்.

## எஸ்.ஐ.ஆர். குறித்து விவாதம்:
# பா.ஜ.க. பார்லி., கூட்டம் இன்று கூடுகிறது

**டெல்லி, டிச. 09-**

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த டிச. 1-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. கூட்டத்தொடரின் முதல் நாளில் இருந்தே வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.) குறித்து விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மக்களவையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.) தொடர்பான விவாதம் இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற உள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி இதனைத் தொடக்கி வைக்கவுள்ளதாகவும் இந்த விவாதம் 10 மணி நேரம் நடைபெறும் என்றும் நாளை (புதன்கிழமை) காலை மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் மேக்வால் பதிலளித்து பேசவுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்று (டிச.9) கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக பா.ஜ.க. பாராளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. டிச. 9, செவ்வாய்க்கிழமை காலை 9. 30 மணிக்கு பாராளுமன்ற நூலகக் கட்டடத்தில் உள்ள பாலயோகி ஆடிட்டோரியத்தில் நடைபெறும் கூட்டத்தில் பா.ஜ.க. மற்றும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

### குல்தீப் யாதவுக்கு விருது

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடியது. இதில் ராஞ்சியில் நடந்த தொடக்க ஆட்டத்தில் இந்தியா 17 ரன் வித்தியாசத்திலும், ராய்ப்பூரில் நடந்த 2-வது ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்கா 4 விக்கெட் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகளில் தொடர் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் 3-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்றது. இதில் இந்திய அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது. முன்னதாக ஒவ்வொரு தொடரிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் இந்திய வீரருக்கு பி.சி.சி.ஐ. 'இம்பேக்ட் வீரர்' விருது வழங்கி கவுரவித்து வருகிறது. அதன்படி தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரின் இம்பேக்ட் வீரராக குல்தீப் யாதவ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

### நாதன் குறித்து ஸ்டீவ் ஸ்மித்

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான பிளேயிங் லெவனில் நாதன் லயன் இடம்பெறாதது குறித்து ஆஸ்திரேலிய அணியின் கேப்டன் ஸ்டீவ் ஸ்மித் விளக்கமளித்துள்ளார். இது குறித்து அவர் பேசியதாவது: நாதன் லயனுக்கு எதிராக அணி நிர்வாகம் எந்த ஒரு முடிவும் எடுக்கவில்லை. அவர் மிகச் சிறந்த வீரர். அவர் பல ஆண்டுகளாக ஆஸ்திரேலிய அணிக்காக சிறப்பாக செயல்பட்டு வருகிறார். ஆனால், அணியில் கூடுதல் பேட்டிங் தெரிவுகள் வேண்டும் என்பதன் காரணமாகவே அவரை பிளேயிங் லெவனில் சேர்க்க முடியாமல் போனது.

பின்வரிசை ஆட்டக்காரர்கள் 50 ஓவர்கள் நின்று விளையாடியது அணியின் சமபலத்துடன் இருப்பதை உறுதி செய்தது. நாதன் லயனுக்கு எதிராக அணி நிர்வாகம் செயல்படவில்லை. அவர் நம்பமுடியாத அளவுக்கு மிகவும் திறமை வாய்ந்த வீரர் என்றார். ஆஸ்திரேலிய அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் நாதன் லயன் 562 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். ஷேன் வார்னேவுக்கு அடுத்தபடியாக டெஸ்ட் போட்டிகளில் ஆஸ்திரேலிய அணிக்காக அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய இரண்டாவது சுழற்பந்துவீச்சாளர் என்ற பெருமை நாதன் லயனையேச் சேரும்.

## சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில்
# டிராவிட் சாதனையை சமன் செய்தார் ஸ்மித்

**பிரிஸ்பேன், டிச.09-**

டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அதிக கேட்ச் பிடித்தவர்கள் பட்டியலில் டிராவிட்டின் சாதனையை ஸ்டீவ் ஸ்மித் சமன் செய்துள்ளார்.

2-வது டெஸ்ட்....

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான ஆஷஸ் 2-வது டெஸ்ட் போட்டி பகல்-இரவு மோதலாக (பிங்க் பந்து டெஸ்ட்) கடந்த 4-ந்தேதி பிரிஸ்பேனில் தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் முறையே இங்கிலாந்து 334 ரன்களும், ஆஸ்திரேலியா 511 ரன்களும் எடுத்தன. பின்னர் 177 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்சில் 75.2 ஓவர்களில் 241 ரன்களுக்கு ஆல்-அவுட் ஆனது. கேப்டன் பென் ஸ்டோக்ஸ் அரைசதம் அடித்தார். ஆஸ்திரேலிய தரப்பில் மைக்கேல் நேசர் 5 விக்கெட்டும், மிட்செல் ஸ்டார்க், ஸ்காட் போலன்ட் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினர்.

**மொத்தம் 5 கேட்ச்...**

பின்னர் 65 ரன் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் 2-வது இன்னிங்சை ஆடிய ஆஸ்திரேலிய அணி 10 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 69 ரன்கள் சேர்த்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த போட்டியில் பீல்டிங்கில் அசத்திய ஆஸ்திரேலிய கேப்டன் ஸ்டீவ் ஸ்மித் மொத்தம் 5 கேட்ச் பிடித்தார். இதையும் சேர்த்து டெஸ்ட் கிரிக்கெட்டில் அவர் பிடித்த கேட்ச்களின் எண்ணிக்கை 210-ஆக உயர்ந்தது. இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக கேட்ச் செய்த பீல்டர்களின் வரிசையில் 2-வது இடத்தில் உள்ள ராகுல் டிராவிட்டின் வாழ்நாள் சாதனையை ஸ்மித் சமன் செய்துள்ளார். இதில் முதலிடத்தில் இங்கிலாந்தின் ஜோ ரூட் (213 கேட்ச்) உள்ளார்.

### அதிக கேட்ச் பிடித்தவர்கள் பட்டியல்:

1. ஜோ ரூட் - 213 கேட்ச்.
2. ராகுல் டிராவிட்/ ஸ்டீவ் ஸ்மித் - 210 கேட்ச்.
3. ஜெயவர்த்தனே - 205 கேட்ச்.
4. ஜாக் காலிஸ் - 200 கேட்ச்.
5. ரிக்கி பாண்டிங் - 196 கேட்ச்.

**மரம் மனிதனின் உரம்**

# மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் புதிய மீன் விதை பண்ணை
## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்



**சென்னை, டிச. 09-**

புதிய மீன் விதைபண்ணையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.98.92 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கு தளம் மற்றும் புதிய மீன் விதைப் பண்ணை ஆகியவற்றை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (டிச. 8) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 98 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளம் மற்றும் புதிய மீன் விதைப் பண்ணை ஆகியவற்றை திறந்து வைத்தார்.

மீன்வளத்தை பாதுகாத்தல், நிலைக்கத்தக்க மீன்பிடிப்பு, மீன் வளர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல், மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்பிடி இடத்திலிருந்து அதன் நுகர்வு வரை சுகாதாரமான முறையில் கையாளப்படுவதை உறுதி செய்வதற்கும் மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், கரையோர வசதிகள், மீன் சந்தைகள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மீன்பிடி தடைகாலங்களில் மீனவர்களுக்கு நிதியுதவி, மீன்பிடி படகுகளுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல், பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல், புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலை விசைப்படகுகளை வாங்கிட மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மீனவ மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திடவும், சமூக பாதுகாப்பினை உறுதி செய்திடவும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளம் மற்றும் புதிய மீன் விதைப்பண்ணை ஆகியவற்றை திறந்து வைத்தல் கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டணம் மீன்பிடி துறைமுகத்தில் 60 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ள கூடுதல் உள் கட்டமைப்பு வசதிகள் மற்றும் பெரியநாயகி தெரு மீனவ கிராமத்தில் 26 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவுடன் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம், மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகம், தென்காசி மாவட்டம், கடானா கிராமத்தில் 2 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அரசு மீன் விதைப் பண்ணை;-

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டணம் மீன்பிடி துறைமுகத்தில் 375 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள படகு அணையும் தளம், 110 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள படகு அணையும் சுவர், மீன் ஏலக்கூடம், மீன் பதப்படுத்தும் கூடம், குளிர் பதன கூடம், வாய்க்கால் பாலம் மற்றும் சாலை ஆகிய கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டதால் 68,300 மீனவர்கள் பயன்பெறுவர் மற்றும் 850 விசைப் படகுகள், 4,800 நாட்டு படகுகள் பாதுகாப்பாக நிறுத்த இயலும். கன்னியாகுமரி மாவட்டம், பெரியநாயகி தெரு மீன் இறங்குதளத்தில் 235 மீட்டர் நீளத்திற்கு நீட்டப்பட்டுள்ள தூண்டில் வளைவு மற்றும் வலை பின்னும் கூடம் ஆகிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டதால் 13,021 மீனவர்கள் பயன்பெறுவர் மற்றும் 235 இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகள், 06 நாட்டு படகுகள் பாதுகாப்பாக நிறுத்த இயலும்.

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி மீன்பிடி துறைமுகத்தில் 350 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள படகு அணையும் சுவர், கூடுதல் மீன் ஏலக்கூடம், கூடுதல் வலைப் பின்னும் கூடம், மீன் உலர்தளம், சாலை ஆகிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டதால் 6,073 மீனவர்கள் பயன்பெறுவர் மற்றும் 45 விசைப் படகுகள், 310 கண்ணாடி நாரிழை படகுகள் பாதுகாப்பாக நிறுத்த இயலும். தென்காசி மாவட்டம், கடானா அரசு மீன் விதைப் பண்ணையில் மீன் வளர்ப்பு தொட்டிகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டதால் ஆண்டுக்கு 5 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்து உள்நாட்டு மீன்வளத்தை உயர்த்த இயலும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கள்ளக்குறிச்சியில் பெற்றோரை இழந்து தவித்த குழந்தைகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உதவி

**சென்னை, டிச. 09-**

கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெற்றோரை இழந்துவாடும் நான்கு குழந்தைகளுக்கு முதல்வர் ஸ்டாலின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்தில், நேற்று கள்ளக்குறிச்சி மாவட்டம், பூட்டை கிராமத்தைச் சேர்ந்த பெற்றோர்களை இழந்த நான்கு குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு வீட்டுமனைப் பட்டா, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீடு, பணிநியமன ஆணை, அன்புக்கரங்கள் திட்டத்தின் கீழ் நிதியுதவி, திறன் பயிற்சிக்கான உதவித்தொகை ஆகியவற்றை வழங்கினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், பூட்டை கிராமத்தைச் சேர்ந்த கமலக்கண்ணன் கடந்த மாதம் 14ஆம் தேதி உடல்நலக் குறைவால் காலமானார். அவரது மனைவி வசந்தி அவர்களும் 2017-ஆம் ஆண்டே உடல்நலக் குறைவால் காலமானார். இத்தம்பதியருக்கு 3 பெண் மற்றும் 1 ஆண் குழந்தைள் உள்ளனர்.

பெற்றோரை இழந்து தவிக்கும் நான்கு குழந்தைகளை முதல்வர் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியதோடு, அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்து தரும் என்று உறுதியளித்தார். இந்த நான்கு குழந்தைகளும் இனி நம் அரசின் குழந்தைகள்! அவர்களது எதிர்காலத்தை அரசு பாதுகாக்கும் என்று முதல்வர் தனது சமூகவலைதளப் பதிவில் தெரிவித்திருந்தார்.

அதன்படி, இன்றையதினம் முதல்வர், மறைந்த கமலக்கண்ணன் அவர்களின் மகள் – செல்வி லாவண்யாவிற்கு ரூ.2,50,000 மதிப்பிலான வீட்டுமனைப் பட்டா, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3,55,600 மதிப்பீட்டில் வீடு கட்டுதவற்கு ஒதுக்கீடு ஆணை, சங்கராபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கணினி உதவியாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணையினையும், மகள் செல்வி ரிஷிகா மற்றும் மகன் செல்வன் அப்னேஷ் ஆகியோருக்கு அன்புக்கரங்கள் திட்டத்தின் கீழ் மாதம் தலா ரூ.2000 நிதி உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகள், மகள் செல்வி ரீணாவிற்கு திறன் அழகு கலை பயிற்சி பெறுவதற்காக ரூ.6,000 உதவித்தொகை ஆகியவற்றை வழங்கினார்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**




தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் 14-வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டியில் பங்கேற்றுள்ள இந்திய அணி வீரர்கள் மற்றும் நிர்வாகிகள் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் உள்ள உலகப் புகழ்பெற்ற 106 அடி உயர சிற்பத்தேரின் முன்பாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

# சினிமா CINI செய்திகள்

## பாலகிருஷ்ணா நடிக்கும் ‘அகண்டா 2’



தெலுங்கு நடிகர் பாலகிருஷ்ணா நடிப்பில், போயபாடி ஶ்ரீனு எழுத்து இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் ‘அகண்டா 2’. இதில் நாயகியாக சம்யுக்தா நடிக்க, ஆதிப் பினிசெட்டி வில்லனாகவும், ஹர்ஷாலி மால்ஹோத்ரா முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்திருக்கிறார்கள். 14 ரீல்ஸ் ப்ளஸ் நிறுவனம் சார்பில் எம்.தேஜஸ்வினி நந்தமூரி வழங்க, ராம் ஆசம்டா , கோபிசந்த் ஆசம்டா தயாரித்திருக்கும் இப்படத்திற்கு தமன்.எஸ் இசையமைத்திருக் கிறார். சி.ராம்பிரசாத் மற்றும் சந்தோஷ் டி.டெடாகே ஒளிப்பதிவு செய்ய, தம்மிராஜு படத்தொகுப்பு செய்திருக்கிறார். தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய 4 மொழிகளில் விரைவில் வெளியாக உள்ள நிலையில், இப்படத்தின் பத்திரிகையாளர்கள் சந்திப்பு சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. இதில், நாயகன் பாலகிருஷ்ணா உள்ளிட்ட படக்குழுவினர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பாலகிருஷ்ணா பேசுகையில், என் அப்பா தான் என் தெய்வம். அவர் எல்லா விதமான படங்களும் செய்து விட்டார், நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி. நான் திரைக்கு வந்து இப்போது 50 வருடமாகிவிட்டது.

அப்பாவின் ஆசியில் இன்னும் நான் ஹீரோவாக நடிக்கிறேன் என்றார். அதைத் தொடர்ந்து நடிகர் ஒய்.ஜி.மகேந்திரன் பேசுகையில், இப்படத்தில் ஒரு துறவியாக நான் நடித்துள்ளேன். இயக்குநர் போயபாடி ஶ்ரீனு. மிகச் சிறந்த இயக்குநர்களில் ஒருவராக கொண்டாடப்படுவார் என்று வாழ்த்தினார். பின்னர் இயக்குநர் போயபாடி ஶ்ரீனு பேசுகையில், என் 3 படங்களுக்கு கேமரா மேனாக வின்சன் பணியாற்றி இருந்தார். அவர் மூலம் தமிழ் கொஞ்சம் தெரிந்திருந்தாலும், எனக்கு அதிகம் பேசத் தெரியாது. இங்கு வந்து வாழ்த்திய அனைவருக்கும் நன்றி என்றார்.

## ‘அங்கம்மாள்’ திரைவிமர்சனம்



இளம் வயதில் கணவரை இழந்த கீதா கைலாசம், தனது இரண்டு மகன்களை வளர்ப்பதற்காக கடுமையாக உழைக்கிறார். தைரியமானவராகவும் அதே நேரம் ஜாக்கெட் அணியாத பெண்மணியாகவும் வலம் வருகிறார். மூத்த மகன் விவசாயியாக வலம் வர இளைய மகன் சரண் மருத்துவராகிறார். ஒரு கட்டத்தில் அம்மா ஜாக்கெட் அணிய வேண்டும் என்று டாக்டர் மகன் விரும்ப, அதற்கு தனது அண்ணியின் உதவியோடு தனது அம்மாவை ஜாக்கெட் அணிய வைக்கிறார். அதன் பிறகு நடக்கும் சம்பவங்கள் தான் மீதிக்கதை. அங்கம்மாள் கதாபாத்திரத்தில் கதையின் நாயகியாக நடித்திருக்கும் கீதா கைலாசம், தான் ஏற்ற கதாபாத்திரத்திற்கு கடுமையாக உழைத்திருக்கிறார்.

பரணி, தென்றல், சரண், முல்லையரசி, சுதாகர், சிறுமி யாஷ்மின் என மற்ற வேடங்களில் நடித்திருப்பவர்கள் அனைவரும் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். ஒளிப்பதிவாளர் அன்ஜாய் சாமுவேல், லொக்கேஷன்களை கதாபாத்திரமாக்கி ரசிக்க வைத்திருக்கிறார். முகமது மக்பூல் மன்சூரின் பின்னணி இசை அருமை., பெருமாள் முருகனின் சிறுகதைக்கு, திரைக்கதை எழுதி இயக்கியிருக்கும் விபின் ராதாகிருஷ்ணன், அங்கம்மாள் என்ற பெண்மணியின் வாழ்வியலை எதார்த்தமாக சொல்ல முயற்சித்திருக்கிறார். தைரியம் மற்றும் சுதந்திரமான பெண்ணாக இருந்தாலும், பெண்கள் சில சூழ்நிலைகளால் அவர்களால் இறுதி வரை தங்களது விருப்பம் போல் வாழ முடிவதில்லை என்பதை பதிவு செய்திருக்கிறார். மொத்தத்தில், ‘அங்கம்மாள்’ சராசரி பெண்.



மதுரையில் மத்திய அரசின் தேசிய நீர் விருது, நீர் பாதுகாப்பில் பொதுமக்களின் பங்களிப்பு விருதுகள் பெற்றதை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங்காலோன் காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன் கூடுதல் ஆட்சியர் திவ்யான்ஷீநிகம் உள்ளார்.

## ‘நிர்வாகம் பொறுப்பல்ல’ திரை விமர்சனம்




நாயகன் கார்த்தீஸ்வரன், பல வழிகளில் மோசடி செய்து ரூ.5 ஆயிரம் கோடி சம்பாதிக்கிறார். அந்த பணத்தை எடுத்துக் கொண்டு வெளிநாட்டுக்கு பறக்க நினைக்கும் போது, போலீஸ் இன்ஸ்பெக்டர் ஶ்ரீநிதியிடம் சிக்கிக் கொள்கிறார்

போலீஸிடம் சிக்கிக் கொண்ட கார்த்தீஸ்வரன் தப்பித்தாரா? அவர் செய்த மோசடிகள் என்ன என்பதற்கான பதிலே நிர்வாகம் பொறுப்பல்ல படம். படத்தை இயக்கி நாயகனாகவும் நடித்திருக்கும் எஸ்.கார்த்தீஸ்வரன் அப்பாவி முகத்தை வைத்துக்கொண்டு அசாதாரன செயல்களைச் செய்து பார்வையாளர்களுக்கு அதிர்ச்சி யூட்டுகிறார். நடிப்பு, நடனம், காமெடி, ஆக்‌ஷன் என அனைத்தையும் சரியாகவும் சிறப்பாகவும் செய்திருக்கிறார். போலீஸ் இன்ஸ்பெக்டராக நடித்திருக்கும் ஶ்ரீநிதி கம்பீரமாக வலம் வருகிறார். மேலும் ஆதவன், லிங்ஸ்டன், பிளாக் பாண்டி, மிருதுலா சுரேஷ், அகல்யா வெங்கடேசன் என அவரும் கொடுத்த வேலையை குறையின்றி செய்திருக்கிறார்கள். ஶ்ரீகாந்த் தேவாவின் இசை சுமார் ரகமே.

எழுதி இயக்கியிருக்கும் எஸ்.கார்த்தீஸ்வரன், தான் சொல்ல வந்த கருத்தை நேர்த்தியாகவும், சுவாரஸ்யமாகவும் சொல்ல முயற்சித்திருக்கும் அதே நேரத்தில், திரைக்கதையில் இன்னும் கூடுதல் கவனம் செலுத்தியிருந்தால், படம் வென்றிருக்கும். ஆனாலும் படத்தின் இந்த நிலைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல

## ‘சாரா’ திரைவிமர்சனம்



கட்டுமான நிறுவனம் ஒன்றில் பொறியாளராக பணியாற்றும் நாயகி சாக்‌ஷி அகர்வால் அதே நிறுவனத்திலுள்ள விஜய் விஸ்வாவை காதலிக்கிறார். இருவருக்கும் திருமணமாக செய்து கொள்ள இருக்கும் நிலையில், கட்டுமான தொழிலாளியான செல்லகுட்டி, இருவரையும் கடத்தி விடுகிறார். அவர் ஏன் எதற்கு கடத்தினார். என்ற கேள்விக்கான விடை தான் சாரா படம்’. கதையின் நாயகியாக சாரா கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் சாக்‌ஷி அகர்வால், கொடுத்த வேலையை குறையின்றி செய்திருக்கிறார். சாக்‌ஷி அகர்வாலின் காதலராக நடித்திருக்கும் விஜய் விஸ்வா, ஹீரோவாக எண்ட்ரிக் கொடுத்தாலும், அதன் பிறகு அவரது நிலைமை கவலைக்கிடம். தோற்றத்தில் தன்னை ஒரு கோமாளியாக காட்டிக்கொண்டு அறிமுகமாகும் இயக்குநர் செல்லகுட்டி, அடுத்தடுத்த காட்சிகளில் எடுக்கும் விஸ்வரூபம் அரங்கையே அதிர வைக்கிறது.

யோகி பாபு, ரோபோ சங்கர், தங்கதுரை, அம்பிகா, மிரட்டல் செல்வா ஆகியோர் அனுபவ நடிப்பை குறையில்லாமல் செய்திருக்கிறார்கள். கார்த்திக் ராஜா இசை சுமார் ரகமே. எழுதி இயக்கியிருக்கும் செல்லகுட்டி, தான் சொல்ல நினைத்த கதையை சற்று தடுமாற்றத்தோடு சொல்லியிருந்தாலும், பவர் ஸ்டார், நடிப்பு அரக்கன் என அனைவரையும் தூக்கி சாப்பிடும் அளவுக்கு அதிரடியான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். பட்டதில் இயக்குநராக வெற்றி பெறவில்லை என்றாலும், ஒரு நடிகராக வெற்றி பெற்று விட்டார். மொத்தத்தில், ‘சாரா’ நடிப்பு அரக்கனை கொடுத்திருக்கிறது.

## பாலமேட்டில் ஏ.வி.டி. – ஐ.டி.சி. குழும்பங்கள் இணைந்து நடத்திய கராத்தே போட்டி: நான்கு மாநிலங்கள் பங்கேற்பு



**அலங்காநல்லூர்,டிச.09-**

மதுரை மாவட்டம் பாலமேட்டில் உள்ள அர்ச்சனா மஹாலில் தென்னிந்திய அளவில் நடைபெற்ற மாபெரும் கராத்தே போட்டிகள்.

இந்த கராத்தே போடிகளில் கர்நாடகா. கேரளா, பாண்டிச்சேரி. மற்றும் ‘தமிழ்நாட்டில் 18 மாவட்டங்களில் இருந்து 600க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள். மற்றும் பயிற்சியாளர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியை ஏ.வி.பி.மற்றும் ஐ.டி.சி.குழும்பங்கள் இணைந்து நடத்தினது முன்னதாக திருவண்ணாமலை ஆதீனம் ஶ்ரீ கருணாநிதி சுவாமிகள் குத்து விளக்கு ஏற்றி தொடக்கி வைத்தார். டாக்டர் பார்த்திபன். பாலகுரு. முன்னிலையில் நடைபெற்றது இந்த விழாவில் அலங்காநல்லூர் முன்னால் சேர்மன் ராம்குமார். பாலமேடு பேரூராட்சி முன்னால் துணை சேர்மன் சேகர். தொழில் அதிபர்கள் மலர்மன்னன் கிருஷ்ண மூர்த்தி. பாலமேடு மகாலிங்க சுவாமி மடத்து கமிட்டி தலைவர் மச்சவேல். செயலாளர் பிரபு. ஆகியோர் கலந்துகொண்டு டனர்



திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு டாஸ்மாக் அனைத்து சங்க கூட்டு நடவடிக்கைக்குழு சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி காலி மது பாட்டில்களை கழுத்தில் அணிந்து ஆர்ப்பாட்டம் செய்து மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

## ‘ஹைக்கூ’ படத்தின் ஃபெஸ்ட் லுக்



‘ஜோ’ கோழிப்பண்ணை செல்லதுரை போன்ற படங்களுக்குப் பிறகு விஷன் சினிமா ஹவுஸ் தயாரிப்பில் வெளியாகும் படம் ஹைக்கூ. இந்தப் படத்திற்கு ஏகன் அருளானந்து எக்ஸிகியூட்டிவ் தயாரிப்பாளராகவும், ஶ்ரீனிவாஸ் நிரஞ்சன் இணைத் தயாரிப்பாளராகவும் உள்ளார். விஷன் சினிமா ஹவுஸ் பேனரில் டாக்டர் டி. அருளானந்து மற்றும் மேத்யூ அருளானந்து இணைந்து ‘ஹைக்கூ’ படத்தைத் தயாரிக்கிறார்கள். இதன் தயாரிப்பாளர் டாக்டர் அருளானந்துவின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ், தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் தயாரிக்கப்படும் இந்த படத்தின் முதல் பார்வை போஸ்டரை தயாரிப்பு நிறுவனம் சமீபத்தில் வெளியிட்டது. படத்தின் கதாநாயகனாக ஏகன் நடிக்க, அவருக்கு ஜோடியாக ஶ்ரீ தேவி அப்பல்லா மற்றும் ஃபெமினா ஜார்ஜ் ஆகியோர் நடிக்கின்றனர். திரைக்கதையை எழுதி இயக்கியுள்ளார் யுவராஜ் சின்னசாமி. அவருடன் இணைந்து ஹரிஹரன் ராம் திரைக்கதை எழுதியிருக்கிறார். விஜய் புல்கான் இசையமைத்துள்ள இந்த படத்தில் அதிர்ச்சி அருண் உட்பட பலர் நடிக்கின்றனர்.

## ‘சாவீ’ திரைவிமர்சனம்



நாயகன் உதய தீப், தனது தந்தையை தனது இரண்டு தாய் மாமன்கள் கொலை செய்து விட்டதாக நினைத்து அவர்கள் மீது கடும் கோபமாக இருக்கிறார். அதே சமயம், ஒரு மாமன் மகளை காதலிக்கவும் செய்கிறார். இதற்கிடையே, அந்த மாமன் ஒரு விபத்தில் இறந்து விடுகிறார். துக்க வீட்டில் அசதியில் அனைவரும் தூங்கி விட, பிணம் காணாமல் போகிறது. காணாமல் போன உடல் என்ன ஆனது, யார் கடத்தியது என்பதை பிளாக் காமெடி ஜானரில் சொல்வதே ‘சாவீ’ படம். சாவு வீடு என்ற தலைப்பை ’சாவீ’ என்று மாற்றி இருக்கிறார்கள். ஆரம்பத்தில் புரியாத புதிராக இருந்தாலும், இறுதியில் ஒரு நல்ல மெசஜோடு, பார்வையாளர்களை சிரிக்க வைக்க இயக்குனர் முயற்சித்திருக்கிறார் என்பது புரிகிறது. நாயகனாக நடித்திருக்கும் உதய தீப், வயதுக்கு ஏற்ற கதாபாத்திரத்தில், அருமையாக நடித்திருக்கிறார். மேலும், ஆதேஷ் பாலா, யாசர், மாஸ்டர் விஜய், கவிதா சுரேஷ், பிரேம் கே.சேஷாத்ரி என மற்ற வேடங்களில் நடித்திருப்பவர்கள் அனைவரும் திரைக்கதைக்கு பொருத்தமான தேர்வு. இசையமைப்பாளர்கள் சரண் ராகவன் மற்றும் விஜே ரகுராம் இருவரது பின்னணி இசையும் ஓகே ரகம். எழுதி இயக்கியிருக்கும் ஆண்டனி அஜித், ஒரு சிறிய சம்பவத்தை வைத்துக் கொண்டு சஸ்பென்ஸ் திரில்லர் ஜானர் படமாக கொடுத்திருக்கிறார். மொத்தத்தில், சாவீ’ ஒரு விழிப்புணர்வு படம்.

## கொடைக்கானல் புனித சலேத் அன்னைக்கு தங்க கிரீடம் சூட்டும் விழா



**கொடைக்கானல்,டிச.09-**

கொடைக்கானலில் அனைத்து மதத்தினராலும் வழிபடும் ஆலயமாக இருப்பது புனித சலேத் அன்னை ஆலயம் ஆகும். 200 ஆண்டுகளுக்கும் மேலாக பழமையான ஆலயமாக இந்த ஆலயம் உள்ளது.

ஆகஸ்ட் மாதம் 14 மற்றும் 15ஆம் தேதிகளில் இந்த ஆலயத்தின் ஆண்டு திருவிழா கொண்டாடப்படும்.

இந்த திருவிழா காலங்களில் மும்மதத்தை சேர்ந்தவர்களும் இங்கு வழிபாடு செய்வது குறிப்பிடத்தக்கது. மிகவும் பழமை வாய்ந்த இந்த ஆலயத்தில் அருள் பாலிக்கும் சலேத் அன்னைக்கு தங்க கிரீடம் சூட்டும் விழா நேற்று நடந்தது. இந்த விழாவிற்கு கொடைக்கானல் திரு இருதய ஆலய பங்குத்தந்தையும் வட்டார அதிபர் பொறுப்பு தந்தையுமான அருட்தந்தை ஜெயசீலன் தலைமை தாங்கி அன்னைக்கு புதிய தங்க கிரீடத்தை சூட்டினார். பின்னர் சிறப்பு திருப்பலி பூஜை நடந்தது. இந்த விழா மற்றும் திருப்பலி பூஜையில் கொடைக்கானல் மறை வட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தையர்கள் பாக்கியபுரம் அருட்தந்தை வினோத் மத்தியாஸ், லூர்துபுறம் பங்கு தந்தை அந்தோணி துரைராஜ், கொடைக்கானல் உதவி பங்கு தந்தை கரோலின்சிபு, ஆகியோர் கலந்து கொண்டனர் சிறப்பு திருப்பலி பூஜையில் கொடைக்கானல் மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை புரிந்த ஏராளமான கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டார்கள் கொடைக்கானல் புனித சலைத் அன்னைக்கு தங்க கிரீடம் சூட்டப்பட்டது.

## ஒட்டன்சத்திரம் சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலரங்க பயிற்சி

**ஒட்டன்சத்திரம், டிச. 09-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கணினி அறிவியல் துறைசார்பில் இரண்டு நாட்கள் ஹிட்டு அண்டு ஹிட்டு ஹப்பு ஃபார் கோடு கொலாபிரேஷன் என்ற தலைப்பில் பயிலரங்க பயிற்சி கல்லூரியின் தாளாளர் மருத்துவர் வேம்பணன் தலைமையில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் தேன்மொழி முன்னிலை வகித்தார். இப்பயிற்சியினை கோவையில் சன் சாப்ட்வேர் சொல்யூஷன் நிர்வாக இயக்குனர் கண்ணன் விளக்கப்பட காட்சி மூலமாக நிரலாக்க அடிப்படைகள் முன்இறுதி வளர்ச்சி கட்டமைப்பைப் பயன்படுத்தி பின்-இறுதி மேம்பாடு , தரவுத்தள மேலாண்மை - வரிசைப்படுத்தல் சார்ந்த பயிற்சிகளை மாணவிகளுக்கு அளித்தார். மாணவிகளும் இப்பயிற்சியினை ஆர்வமுடன் கற்றுக் கொண்டனர். மேலும் பயிலரங்க பயிற்சியினை கணினி அறிவியல் துறை தலைவர் முனைவர் கவிதா மற்றும் துறை பேராசிரியர்கள் ஒருங்கிணைப்பு செய்தனர்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

## நத்தம் பகுதி விநாயகர் கோவில்களில் சங்கடஹர சதுர்த்தி விழா

**நத்தம், டிச.09-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணியசுவாமி கோவில் அருகில் உள்ள விநாயகர் சன்னதியில் சங்கடஹர சதுர்த்தி விழா நடந்தது. இதையொட்டி விநாயகப் பெருமானுக்கு அருகம்புல்,ரோஜா, மல்லிகை, உள்ளிட்ட பல பூமாலைகள் செலுத்தபட்டு சிறப்பு பூஜைகளும், தீபாராதனைகளும் நடந்தது. இதில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதைப் போலவே கோவில்பட்டி கைலாசநாதர் கோவிலில் உள்ள விநாயகர், குட்டூர் உண்ணாமுலை அம்பாள் கோவிலில் உள்ள வலம்புரி விநாயகர் சன்னதி, பகவதி அம்மன் கோவிலில் உள்ள வெற்றி விநாயகர் சன்னதிகளிலும் சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது. இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு விளக்கேற்றி தரிசனம் செய்தனர்.



தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில், இளைஞர் அணிச்செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் சந்தித்து, திருவண்ணாமலையில் 14ம் தேதி நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சிக்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மாநில இளைஞர் அணி துணைச்செயலாளர் பிரபு கஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி சென்னையில் திருவள்ளூர் வடக்கு மாவட்ட புரட்சித் தலைவி பேரவைச் செயலாளர் விஜயகுமார்-அனிதா விஜயகுமார் தம்பதியரின் மகள் சஞ்ஜனா- தருண் விகாஷ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் தலைமைக்கழக செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகளும், மணமக்களின் குடும்பத்தினரும் உடன் இருந்தனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், கள்ளக்குறிச்சி மாவட்டம், பூட்டை கிராமத்தைச் சேர்ந்த பெற்றோர்களை இழந்த 4 குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு வீட்டுமனைப் பட்டா, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீடு, பணிநியமன ஆணை, அன்புக்கரங்கள் திட்டத்தின் கீழ் நிதியுதவி, திறன் பயிற்சிக்கான உதவித்தொகை ஆகியவற்றை வழங்கினார்.

## தமிழகத்தின் 5 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட

# மத்திய அரசின் விருதுகளை முதல்வரிடம் காண்பித்து வாழ்த்து பெற்ற கலெக்டர்கள்

சென்னை, டிச. 09-

மத்திய அரசின் தேசிய நீர் விருதுகள் மற்றும் நீர் பாதுகாப்பில் பொதுமக்கள் பங்களிப்பு விருதுகள் உள்ளிட்ட விருதுகளை பெற்ற 5 மாவட்டங்களின் கலெக்டர்கள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்த வாழ்த்து பெற்றனர்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;- தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று (8.12.2025) தலைமைச் செயலகத்தில், மத்திய அரசின் தேசிய நீர் விருதுகள், நீர் பாதுகாப்பில் பொதுமக்கள் பங்களிப்பு விருதுகள் ஆகிய விருதுகளை பெற்ற திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் மு.பிரதாப், கோயம்புத்தூர் மாவட்ட கலெக்டர் பவன்குமார் ஜி. கிரியப்பனவர், நாமக்கல் மாவட்ட கலெக்டர் துர்கா மூர்த்தி ஆகியோர் சந்தித்து விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

முன்னதாக, திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் மரு.ஆர்.சுகுமார் மற்றும் ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் ஆகியோர் இவ்விருதுகளை பெற்றதற்காக மதுரையில் நேற்று முன்தினம் (7.12.2025) முதல்-அமைச்சரை சந்தித்து வாழ்த்து பெற்றனர். மழைநீர் சேகரிப்பு மற்றும் செயற்கை மறுசீரமைப்பு பணிகள் மூலம் நிலத்தடி நீரை அதிகரித்தல், புதிய நடைமுறைகளைப் பின்பற்றுதல், நீர் பயன்பாட்டு செயல்திறனை ஊக்குவித்தல், மறுசுழற்சி செய்தல் மற்றும் தண்ணீரை மீண்டும் பயன்படுத்துதல், இலக்கு பகுதிகளில் உள்ள மக்களின் பங்கேற்பு மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற முயற்சிகளை ஊக்குவிக்கும் விதமாக ஒன்றிய நீர் வளம், நதி மேம்பாடு, கங்கை புத்தாக்க துறையின் கீழ் தேசிய நீர் விருதுகள் மாநில விருதுகள், மாவட்ட அளவிலான விருதுகள், கிராம ஊராட்சிகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், பொது சங்கங்கள், நீர் பயனர் சங்கங்கள், பெருநிறுவனங்கள், தனி நபர்கள் ஆகியோருக்கு விருதுகள் ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கீழ் மேற்கொள்ளப்படும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், ஜல் ஜீவன் திட்டம், 15-வது ஒன்றிய நிதிக்குழு மானியம், 6-வது மாநில நிதிக்குழு மானியம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் , பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பாரம்பரிய நீர்நிலைகளான ஏரிகள், குளங்கள் மற்றும் ஊரணிகள் புனரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், ஆறுகளின் கிளைகள் புத்தாக்கம், மழைநீர் சேகரிப்புகள் அமைத்தல், நீர் சேகரிப்பு அமைப்புகள் அமைத்தல் போன்ற நீர் பாதுகாப்பு மற்றும் நீர் வள மேம்பாட்டு பணிகளை பாராட்டி 4 மாவட்ட அளவிலான விருதுகள் மற்றும் 1 கிராம ஊராட்சி அளவிலான விருது வழங்கப்பட்டுள்ளது.

2024-25 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு 6-வது தேசிய நீர் விருதுகள் பிரிவில் தேசிய அளவில் தெற்கு மண்டலத்தில் சிறந்த மாவட்டமாக திருநெல்வேலி மாவட்டம் தேர்வு செய்யப்பட்டது. மேலும், திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை, பாலாபுரம் கிராம ஊராட்சி தேசிய அளவில் சிறந்த கிராம ஊராட்சிக்காக 3-வது இடத்திற்கான விருதை பெற்றுள்ளது. அத்துடன் நீர் பாதுகாப்பில் பொதுமக்கள் பங்களிப்பு விருதுகள் பிரிவின் கீழ் சிறந்த மாவட்டத்திற்கான விருதுகளை கோயம்புத்தூர் (3வது இடம்), நாமக்கல் (10வது இடம்), ராமநாதபுரம் (13 வது இடம்) மாவட்டங்கள் பெற்றுள்ளன. புதுடெல்லியில் உள்ள விக்யான் பவனில் 18.11.2025 அன்று நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், விருது பெற்ற மாவட்டங்களை சேர்ந்த மாவட்ட கலெக்டர்கள் பங்கேற்று இந்திய ஜனாதிபதியிடம் இருந்து கோப்பை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை பெற்றனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான டென்மார்க் தூதர் ராஸ்மஸ் அபில்கார்ட் கிறிஸ்டென்சென் சந்தித்து பேசினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச்செயலாளர் முருகானந்தம், பொதுத்துறைச்செயலாளர் ரீட்டா ஹரிஷ் தக்கர், டென்மார்க் கௌரவத் தூதர் விஜய் சங்கர், கௌரவத் துணை தூதர் எஸ்.பி. பிரபாகர் ராவ், சன்மார் நிறுவனத்தின் தலைவர் கார்த்திக் ராஜசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சிறு விளையாட்டு அரங்கம்... (1-ம் பக்க தொடர்ச்சி)

பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2024-2025ம் ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினால் 22 சட்டமன்றத் தொகுதிகளில் முதல்வர் சிறு விளையாட்டரங்கங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருவதோடு, விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது.

தற்போது மூன்றாவது கட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டம் - பர்கூர் மற்றும் தளி சட்டமன்ற தொகுதிகளிலும், தஞ்சாவூர் மாவட்டம் - பேராவூரணி, திருவையாறு மற்றும் ஒரத்தநாடு சட்டமன்ற தொகுதிகளிலும், கோயம்புத்தூர் மாவட்டம் - கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மணப்பாறை சட்டமன்ற தொகுதியிலும், விழுப்புரம் மாவட்டம் - செஞ்சி, திண்டிவனம் மற்றும் திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதிகளிலும், சென்னை மாவட்டம் - மதுரவாயல், திரு.வி.க.நகர் மற்றும் பெரம்பூர் சட்டமன்ற தொகுதிகளிலும், விருதுநகர் மாவட்டம் – திருச்சுழி மற்றும் ராஜபாளையம் சட்டமன்ற தொகுதிகளிலும், காஞ்சிபுரம் மாவட்டம்- திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதியிலும், திருவாரூர் மாவட்டம் – நன்னிலம் மற்றும் திருத்துறைபூண்டி சட்டமன்ற தொகுதிகளிலும், கரூர் மாவட்டம் – குளித்தலை சட்டமன்ற தொகுதியிலும், செங்கல்பட்டு மாவட்டம் – ஆலந்தூர் சட்டமன்ற தொகுதியிலும், கன்னியாகுமரி மாவட்டம் - கிள்ளியூர் சட்டமன்ற தொகுதியிலும், சேலம் மாவட்டம் - சங்ககிரி மற்றும் எடப்பாடி சட்டமன்ற தொகுதிகளிலும், என மொத்தம் 23 சட்டமன்றத் தொகுதிகளில் 69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதல்வர் சிறு விளையாட்டரங்கங்கள் அமைப்பதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டினார்.

முதல்வர் சிறு விளையாட்டரங்கில் தடகளம், கால்பந்து, கூடைப்பந்து, கையுந்து பந்து, கபடி மற்றும் அந்தந்த பகுதிகளில் உள்ள பிரபலமான விளையாட்டுகள் உட்பட குறைந்தபட்சம் ஐந்து முக்கிய விளையாட்டுக்களுக்கான வசதிகளுடன் இவ்விளையாட்டரங்கம் அமைக்கப்பட உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 98 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளம் மற்றும் புதிய மீன் விதைப் பண்ணை ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சட்டசபை தேர்தலில்... (1-ம் பக்க தொடர்ச்சி)

பொருட்கள் மற்றும் உணவு வழங்கும் முறையும் எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என்பதை மக்களுக்கு களத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும்.

### கூடுதலாக வாக்குகள்...

நமது சிறப்பான பணிகளைப் பார்த்து நடுநிலை வாக்காளர்களும் இன்று நமக்கு ஆதரவாக நிற்கின்றனர். மொத்தமாக, பயனாளிகள்-கழகத்தினர்-நடுநிலை வாக்காளர்கள் என சேர்த்தால், 2.50 கோடி வாக்குகளை தாண்டுவது சாத்தியமே. கடந்த 2021 சட்டப் பேரவைத் தேர்தலில் நமது கூட்டணி பெற்ற வாக்குகள் 2 கோடியே 9 லட்சம் வாக்குகள் தான். இந்த முறை, அதைவிட கூடுதலாக அதிக வாக்குகளைப் பெறுவது உறுதி.

### எதிராக பயன்படுத்துவர்...

இந்த புள்ளிவிவரங்களை முன்வைத்து, உங்கள் களப்பணியின் மீது உள்ள நம்பிக்கையோடு தெளிவாகக் கூறுகிறேன். நாம்தான் மீண்டும் ஆட்சியமைக்க உள்ளோம். இத்தனை சாதகமான சூழ்நிலைகள் இருந்தாலும், நம் எதிரிகளைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. சி.பி.ஐ, ஈ.டி, ஐ.டி, தேர்தல் ஆணையம், இவையனைத்தையும் அவர்கள் நமக்கு எதிராக பயன்படுத்துவார்கள். தினந்தோறும் எராளமான பொய்கள் பரப்புவார்கள், போலியான பிம்பங்களை உருவாக்கு வார்கள், ஊடகங்களைப் பயன்படுத்தி பொய்ச் செய்திகளை பரப்புவார்கள்.

### முக்கியமான வியூகம்...

இவற்றை எதிர்கொள்ள, நமது பலத்தை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். கொள்கை தான் நமது பலம். நிர்வாகிகள் தான் நமது பலம். தீயாக உழைக்கும் கழக உடன்பிறப்புகள் தான் நமது பலம். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உள்ள கழக கட்டமைப்பு தான் நமது பலம். இந்த பலங்களை மிகத் துல்லியமாகப் பயன்படுத்துவதே நமது முக்கியமான வியூகம் ஆக இருக்க வேண்டும். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் நமது வாக்குகளை உறுதி செய்திருக்க வேண்டும். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் நமது கழகத்தினர் உற்சாகத்துடன் செயல்பட வைக்க வேண்டும்.

### நேரடியாகப் பங்கேற்பேன்...


அதற்காகத்தான், "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற இந்தப் பரப்புரை. அந்தந்த வாக்குச்சாவடிக்குட்பட்ட மாநில நிர்வாகி முதல், வார்டு மற்றும் கிளைச் செயலாளர்கள் வரை அனைவரையும் இந்தக் கூட்டங்களில் பங்கேற்க அழைக்க வேண்டும். அந்த வாக்குச்சாவடியில் மூத்த கழக முன்னோடிகள் அல்லது ஏதேனும் அதிருப்தியாளர்கள் இருந்தால், அவர்களையும் தவறவிடாமல் அழைக்க வேண்டும். தேனாம்பேட்டையில், என் வாக்குச்சாவடியில் பகுதிச்செயலாளர் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் நானும் நேரடியாகப் பங்கேற்பேன். வீடு வீடாகச் செல்லும் பூத் கமிட்டி குழுக்களில் மகளிர் கட்டாயம் இடம்பெற வேண்டும்.

### எதிர்பார்க்கிறேன்....

ஒவ்வொரு பூத் கமிட்டி உறுப்பினரும் வீடு வீடாகச் செல்லுவதை உறுதி செய்யுங்கள். வீடுவீடாக சென்று விடுபட்ட வாக்காளர்களின் விவரங்களை முறையாக சரிபார்க்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும், திராவிட மாடல் அரசின் சாதனைகள் அடங்கிய துண்டறிக்கைகள் வழங்கப்பட வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். நான் இரவிலும் உறங்காமல் உழைத்து வருகிறேன் என்பது உங்களுக்கே தெரியும். அதே அளவிலான உழைப்பை, உங்களின் ஒவ்வொருவரிடமிருந்தும் நான் எதிர்பார்க்கிறேன்.

### ஒப்படைக்கிறேன்....

ஒரு வாக்குச்சாவடியை வென்றால், ஒரு தொகுதியை வெல்லலாம். எனவே, இந்தத் தேர்தலில் ஒவ்வொரு வாக்குச்சாவடியும் மிக முக்கியமானது. உங்கள் வாக்குச்சாவடியில் வெற்றி பெற வேண்டிய பொறுப்பை உங்களிடமே ஒப்படைக்கிறேன். ஒவ்வொருவரும் தங்களது வாக்குச்சாவடிகளில் வென்று வருவீர்கள் என்ற முழு நம்பிக்கையுடன் இந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்துள்ளேன். என் நம்பிக்கையை காப்பாற்றுங்கள். மீண்டும் வெல்வோம், வரலாறு படைப்போம். இவ்வாறு அவர் பேசினார்.




முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச்செயலகத்தில், மத்திய அரசின் தேசிய நீர் விருதுகள், நீர் பாதுகாப்பில் பொதுமக்கள் பங்களிப்பு விருதுகள் ஆகிய விருதுகளை பெற்ற திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் பிரதாப், கோயம்புத்தூர் மாவட்ட கலெக்டர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், நாமக்கல் மாவட்ட கலெக்டர் துர்காமூர்த்தி ஆகியோர் சந்தித்து விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றனர். முன்னதாக, திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் சுகுமார் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் ஆகியோர் இவ்விருதுகளை பெற்றதற்காக நேற்று முன்தினம் மதுரையில் முதல்வரை சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.